SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே







16 புதன்கிழமை செப்டெம்பர் 2026 | 16 Wednesday September 2026 Switzerland Edition


# ஈழத்தமிழர்கள் அந்நிய நாடுகளில் அமைச்சர்கள் தொப்புள்கொடி நாட்டில் இன்னும் அகதிகள்!

(சுபீட்சம் வேதாந்தி)

ஒரு காலத்தில் உயிரைக் காப்பாற்றி க்கொள்வதற்காகத் தமது வீடுகளையும், உறவுகளையும், தாயகத்தையும் விட்டுச் சென்றவர்கள் ஈழத்தமிழர்கள்.

அவர்கள் தஞ்சமடைந்த நாடுகளின் மொழி வேறு... இனம் வேறு.கலாசாரம் வேறு.வாழ்க்கை முறையும் வேறு.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE




வீடியோவை பார்வையிட CLICK HERE

## சுவிட்சர்லாந்து முழுவதும் Food Waste-க்கு எதிரான தேசிய நடவடிக்கை வாரம்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## நோர்வே அரசில் உயர்ந்த தமிழ்ப் பின்னணியுடைய பெண் அரசியல்வாதி!

### புதிய போக்குவரத்து அமைச்சராக கம்சி குணரத்தினம் நியமனம்

(சுபீட்சம் வேதாந்தி)

இலங்கையில் பிறந்து, அகதிப் பின்னணியுடன் நோர்வேக்கு குடிபெயர்ந்து, அந்நாட்டின் அரசியலில் படிப்படியாக உயர்ந்த கம்சி குணரத்தினம் (Kamzy Gunaratnam), நோர்வேயின் புதிய

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE


Click on the ads to view them in full

Food is our trade — World is our Market — Sai Trader since 1991 GmbH — Importeur fur frishe, exotische Gemuse | Fruchte & Fische

MULTI CONSULTING Versicherung & Finanz

IMPORTAS Cash & Carry

VTS Finance GmbH

Sj SRI JEWELLERY

TAMINAA AYURVEDIC WELLNESS

Pickeed


## கனடாவின் Ontario மாகாண முதலாவது AI பயன்பாட்டு இணை அமைச்சராக தமிழர் விஜய் தணிகாசலம்!

கனடாவின் Ontario மாகாண வரலாற்றில் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ள “செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டு இணை அமைச்சர்” – Associate Minister of Artificial Intelligence Adoption – பதவிக்கு தமிழரான விஜய் தணிகாசலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## ஐரோப்பாவில் மீண்டும் No.1 - Zuerich HB தொடர்ந்து 5 வது ஆண்டாக முதலிடம்!

சுவிட்சர்லாந்தின் மிக முக்கியமான போக்குவரத்து மையங்களில் ஒன்றான Zuerich Hauptbahnhof (Zuerich HB) மீண்டும் ஐரோப்பாவின் சிறந்த பெரிய ரயில் நிலையமாகத்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE




ஆனால் அந்த நாடுகள் அவர்களை நிரந்தரமாக முகாம்களுக்குள் அடைத்து வைக்கவில்லை. கல்வி கற்க வாய்ப்பளித்தன; வேலை செய்ய வழி திறந்தன; குடியுரிமை வழங்கின; அரசியலில் பங்கேற்கும் உரிமையையும் உறுதிப்படுத்தின.

அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திய ஈழத்தமிழர்களும் அவர்களது அடுத்த தலைமுறையினரும் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் உயர்ந்து, தங்களுக்கு அடைக்கலம் கொடுத்த நாடுகளின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் பங்களிக்கின்றனர்.

1983ஆம் ஆண்டு தனது தாயாருடன் அகதியாகக் கனடாவுக்குச் சென்ற HARI ஆனந்தசங்கரி, இன்று கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றுகிறார். இதற்கு முன்னர் கனடாவின் நீதியமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் அவர் பதவி வகித்துள்ளார். அகதியாக நுழைந்த ஒரு சிறுவனை, நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சராகக் கனடா உயர்த்தியுள்ளது.

இலங்கையில் பிறந்து நோர்வேக்குச் சென்ற கம்சி குணரத்தினம், இன்று அந்நாட்டின் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். அவர் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகவும், முன்னதாக ஒஸ்லோ நகரின் துணை மேயராகவும் பணியாற்றியுள்ளார்.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் ஈழத்தமிழரான விஜய் தணிகாசலம், செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டிற்கான இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் மனநலம் சார்ந்த அமைச்சுப் பொறுப்புகளையும் அவர் வகித்துள்ளார்.

பிரிட்டனில் இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த உமா குமரன், வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டுத் துறையின் நாடாளுமன்றத் துணை அமைச்சராகவும் அரசாங்கத்தின் உதவிக் கொறடாவாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2024ஆம் ஆண்டு முதல் Stratford and Bow தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.

இவை நான்கு தனிநபர்களின் வெற்றிகள் மட்டுமல்ல!

அகதிகளுக்கு உரிமையும் வாய்ப்பும் வழங்கப்பட்டால், அவர்கள் அந்த நாட்டிற்கே



தலைமை தாங்கும் அளவுக்கு உயர்வார்கள் என்பதற்கான வாழும் சாட்சிகள்!

ஆனால் இங்கே ஒரு வேதனையான கேள்வி எழுகிறது:

தமிழர்களின் தொப்புள்கொடி நாடாக அழைக்கப்படும் இந்தியாவில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர்களின் நிலை என்ன?

தமிழ்நாட்டின் மொழி அவர்களுடைய மொழி.

கலாசாரம் அவர்களுடைய கலாசாரம்.

உறவுகளும் உணர்வுகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை.

இருந்தபோதிலும், பல ஈழத்தமிழர் குடும்பங்கள் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளாக முகாம்களிலேயே வாழ்கின்றன. அவர்களுடைய பிள்ளைகளில் பலர் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். ஆனாலும் சட்டபூர்வமான அடையாளம், குடியுரிமை, உயர்கல்வி, நிரந்தர வேலைவாய்ப்பு, சுதந்திரமான நடமாட்டம் மற்றும் அரசியல் உரிமைகள் போன்றவற்றில் நடைமுறைத் தடைகளை எதிர்கொள்வதாக 2026ஆம் ஆண்டு வெளியான ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

தமிழ்நாடு அரசு வீடமைப்பு, கல்வி உதவி, உணவு, வாழ்வாதாரம் மற்றும் திறன் பயிற்சி உள்ளிட்ட பல நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதை நாம் மறுக்க முடியாது. உயர்கல்வி மாணவர்களுக்கான நிதியுதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஆனால் நலத்திட்டங்கள் மட்டும் ஒரு நிரந்தரத் தீர்வாகிவிடாது.

இந்தப் பின்னணியில்தான், மண்டபம் மறுவாழ்வு முகாமில் மருத்துவச் சிகிச்சைக்காகச் சென்னைக்குச் செல்ல அனுமதி கேட்ட ஈழத்தமிழர் ஒருவரை முகாம் அதிகாரி காலணியால் தாக்க முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

53 வயதான ஜெகநாதன் என்பவர் தனது மருத்துவத் தேவைக்காகப் பயண அனுமதி கோரியபோது வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அதிகாரி காலணியைக் கழற்றித் தாக்க முயன்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு விசாரணையின் முடிவிலேயே முழுமையாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு மனிதர் மருத்துவ உதவி கேட்டு அதிகாரியின் முன்னால் நிற்கும்போது, அவருக்குக் கிடைக்க வேண்டியது–

செருப்பு அல்ல... சிகிச்சை!

அவமானம் அல்ல... மரியாதை!

அச்சுறுத்தல் அல்ல... பாதுகாப்பு!

முகாம் வாழ்க்கை அல்ல... உரிமைகளுடன் கூடிய நிரந்தரத் தீர்வு!

கனடா ஓர் அகதியை நாட்டின் பொதுப் பாதுகாப்பு அமைச்சராக்கியுள்ளது.

நோர்வே ஓர் ஈழத்தமிழ்ப் பெண்ணைத் தேசிய அமைச்சராக்கியுள்ளது.

ஒன்ராறியோ ஓர் ஈழத்தமிழரைச் செயற்கை நுண்ணறிவுத் துறையின் இணை அமைச்சராக்கியுள்ளது.

பிரிட்டன் ஓர் இலங்கைத் தமிழ் வம்சாவளிப் பெண்ணை வெளியுறவுத்துறைத் துணை அமைச்சராக்கியுள்ளது.

ஆனால் தொப்புள்கொடி உறவு பேசப்படும் தமிழ்நாட்டில், தலைமுறைகள் கடந்தும் ஈழத்தமிழர்கள் முகாம் அடையாளத்துடன் வாழவேண்டிய நிலை தொடரலாமா?

அவர்களுக்கான உயர்கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்திரமான நடமாட்டம், சட்டப் பாதுகாப்பு மற்றும் குடியுரிமைக்கான தெளிவான பாதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தொப்புள்கொடி உறவு என்பது மேடைகளில் பேசப்படும் வார்த்தையாக மட்டும் இருக்கக்கூடாது!

அது உரிமையில் தெரிய வேண்டும்... மரியாதையில் தெரிய வேண்டும்... செயலிலும் தெரிய வேண்டும்!






போக்குவரத்து அமைச்சராக (Minister of Transport / Samferdselsminister) அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நோர்வே பிரதமர் Jonas Gahr Støre தலைமையிலான அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் ஒரு பகுதியாக இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

நோர்வே மன்னர் தலைமையில் 11 செப்டம்பர் 2026 அன்று நடைபெற்ற Council of State கூட்டத்தில் கம்சி குணரத்தினத்தின் நியமனம் அதிகாரப்பூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. அவர் Jon-Ivar Nygård என்பவருக்குப் பதிலாக போக்குவரத்து அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த மாற்றம் 11 செப்டம்பர் 2026 நண்பகல் 12 மணியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக நோர்வே பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

## கம்சி குணரத்தினம் யார்?

கம்சி குணரத்தினம் 27 மார்ச் 1988 அன்று இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அவரது இயற்பெயர் Khamshajiny என நோர்வே ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கையில் போர் நிலவிய காலகட்டத்தில் பிறந்த அவர், 1991ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் நோர்வேக்கு குடிபெயர்ந்தார். குடும்பம் முதலில் Hammerfest பகுதியில் வாழ்ந்த பின்னர் Osloவுக்குச் சென்றது. கம்சி Osloவின் Groruddalen பகுதியில் வளர்ந்தார்.

2026 பிப்ரவரியில் நோர்வே நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர், தான் 1988இல் போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் பிறந்ததாகவும், தனது தாய் கர்ப்பிணியாக இருந்தபோது விமானத் தாக்குதல் எச்சரிக்கைகளின் மத்தியில் கோவில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் தேடியதாகவும் தனது குடும்ப அனுபவத்தைப் பகிர்ந்திருந்தார்.

## இளம் வயதிலேயே அரசியல் பயணம்

கம்சி குணரத்தினம் நோர்வேயின் Labour Party - Arbeiderpartiet கட்சியைச் சேர்ந்தவர்.

2007 முதல் Oslo நகர அரசியலில் செயல்பட்ட அவர், 2009-2011 காலத்தில் Oslo AUF இளைஞர் அமைப்பின் தலைவராக இருந்தார்.

பின்னர் அவரது அரசியல் பயணம் மேலும் உயர்ந்தது.

2015 முதல் 2021 வரை Oslo நகரத்தின் துணை மேயராக (Deputy Mayor) பணியாற்றினார். 2021ஆம் ஆண்டு முதல் Osloவை பிரதிநிதித்துவப்படுத்தும் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2025 தேர்தலிலும் மீண்டும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், Transport and Communications Committee-யின் First Vice Chair பொறுப்பையும் வகித்தார்.

## Utøya தாக்குதலில் உயிர் தப்பியவர்

கம்சி குணரத்தினத்தின் வாழ்க்கையில் மற்றொரு முக்கியமான சம்பவமும் உள்ளது. 22 ஜூலை 2011 அன்று Utøya தீவில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து உயிர் தப்பியவர்களில் அவரும் ஒருவர். அந்தத் தாக்குதலுக்குப் பின்னரும் அரசியலில் தொடர்ந்து செயல்பட்டு, Oslo நகர நிர்வாகத்திலிருந்து நோர்வே நாடாளுமன்றம் வரை உயர்ந்துள்ளார்.

## புதிய அமைச்சராக என்ன பொறுப்பு?

நோர்வேயின் போக்குவரத்து அமைச்சராக கம்சி குணரத்தினம் நாட்டின் மக்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக் கொள்கை மற்றும் அஞ்சல் சேவைகள் தொடர்பான அரசாங்கப் பொறுப்புகளை கவனிப்பார்.

சாலை, ரயில் மற்றும் நாட்டின் பரந்த போக்குவரத்து அமைப்புடன் தொடர்புடைய கொள்கைகளில் Samferdselsdepartementet முக்கிய பங்கு வகிப்பதால், இது நோர்வே அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

## இலங்கை தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் குரல்

கம்சி குணரத்தினத்தின் இலங்கைப் பின்னணி வெறும் வாழ்க்கை வரலாற்றுடன் நின்றுவிடவில்லை.

2026 பிப்ரவரியில் நோர்வே நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதத்தில் அவர் யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நீதி தொடர்பான கேள்விகள் குறித்தும் பேசினார்.

நோர்வேயில் பெரிய தமிழ் சமூகமொன்று வாழ்வதாகவும், அவர்கள் இலங்கையில் நடைபெறும் விடயங்களை தொடர்ந்து கவனித்து வருவதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

## தமிழ்ச் சமூகத்திற்கு ஏன் இது முக்கியமான செய்தி?

இலங்கையில் பிறந்து, சிறுவயதில் குடும்பத்துடன் நோர்வேக்கு குடிபெயர்ந்து, அந்நாட்டின் சமூகத்துடன் இணைந்து வளர்ந்து, நகர அரசியல், துணை மேயர் பதவி, நாடாளுமன்றம் என முன்னேறி இன்று நோர்வே அரசாங்கத்தின் அமைச்சராக உயர்ந்திருப்பது புலம்பெயர் சமூகங்களின் அரசியல் பங்கேற்பை வெளிப்படுத்தும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

குறிப்பாக ஐரோப்பாவில் வாழும் தமிழ் வம்சாவளியினருக்கும் இளைய தலைமுறையினருக்கும், ஜனநாயக அரசியல் மற்றும் பொதுச் சேவையில் பங்கேற்பதன் மூலம் நாட்டின் உயர்மட்டப் பொறுப்புகளை அடைய முடியும் என்பதற்கான குறிப்பிடத்தக்க உதாரணமாக அவரது பயணத்தைப் பார்க்கலாம்.

## சுருக்கமாக

பெயர்: Kamzy Gunaratnam

பிறப்பு: 27.03.1988 - யாழ்ப்பாணம், இலங்கை

நோர்வேக்கு குடிபெயர்ந்தது: 1991

கட்சி: Labour Party (Arbeiderpartiet)

Oslo துணை மேயர்: 2015-2021

நாடாளுமன்ற உறுப்பினர்: 2021 முதல்

புதிய பதவி: நோர்வே போக்குவரத்து அமைச்சர்

பதவியேற்ற நாள்: 11.09.2026

பதவி அமலுக்கு வந்த நேரம்: நண்பகல் 12.00 மணி

இலங்கையின் போர்ச் சூழலில் பிறந்த ஒரு சிறுமி – நோர்வேக்கு குடிபெயர்ந்த குடும்பத்தின் மகள் – Osloவின் துணை மேயர் – நாடாளுமன்ற உறுப்பினர் – இன்று நோர்வேயின் போக்குவரத்து அமைச்சர்.

கம்சி குணரத்தினத்தின் பயணம் ஒரு தனிநபரின் அரசியல் வெற்றியை மட்டும் குறிப்பிடுவதல்ல; புலம்பெயர்ந்து வாழும் ஒரு சமூகத்தின் அடுத்த தலைமுறைக்கு அரசியல் மற்றும் பொதுச் சேவையில் உருவாகக்கூடிய வாய்ப்புகளையும் எடுத்துக்காட்டுகிறது.




# சுவிஸ் பச்சைப் பாலில் ரப்பர் சார்ந்த இரசாயனங்கள்

சுவிட்சர்லாந்து: சுவிஸ் பச்சைப் பால் மாதிரிகளில் ரப்பர் சார்ந்த நான்கு வகையான இரசாயனங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக லோசான் சுவிஸ் கூட்டாட்சி தொழில்நுட்பக் கல்லூரி (EPFL) ஆய்வு தெரிவித்துள்ளது.

சாலைகளுக்கு அருகிலுள்ள பண்ணைகளில் வாகன டயர் தேய்மானமும், பால் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ரப்பர் குழாய்கள் மற்றும் இணைப்புகளும் இதற்கான சாத்தியமான மூலங்களாக இருக்கலாம். போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளிலிருந்து தொலைவில் உள்ள மூன்று ஆல்ப்ஸ் பண்ணை மாதிரிகளில் இந்த இரசாயனங்கள் கண்டறியப்படவில்லை.

எனினும், இந்த இரசாயனங்கள் மனித உடல்நலத்திற்கு ஆபத்தானவை என்று ஆய்வு நிரூபிக்கவில்லை. அவற்றின் நீண்டகால உடல்நலத் தாக்கம் குறித்து மேலும் ஆய்வு தேவைப்படுகிறது.

**தகவல்மூலம்**

EPFL – லோசான் சுவிஸ் கூட்டாட்சி தொழில்நுட்பக் கல்லூரி (École polytechnique fédérale de Lausanne)

Swiss Federal Food Safety and Veterinary Office (BLV/FSVO) – சுவிஸ் கூட்டாட்சி உணவுப் பாதுகாப்பு மற்றும் கால்நடை அலுவலகம்




# சுவிட்சர்லாந்தின் வேலை அனுமதியில் பலர் அறியாத முக்கிய விதிகள்

சுவிட்சர்லாந்து: வெளிநாட்டவர்கள் சுவிட்சர்லாந்தில் வேலை செய்வதற்கும் வசிப்பதற்கும் L, B, C மற்றும் G போன்ற பல்வேறு Permit-கள் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கான அடிப்படை விதிகளை கூட்டாட்சி அரசு வகுத்தாலும், அனுமதிகளை வழங்குவது சம்பந்தப்பட்ட கன்டோன் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

EU/EFTA நாட்டவர்களுக்கும், ஏனைய மூன்றாம் நாட்டவர்களுக்கும் விதிமுறைகள் வேறுபடுகின்றன. குறிப்பாக மூன்றாம் நாட்டவர்களுக்கு வேலை, கன்டோன் மாற்றம் மற்றும் மொழித் திறன் தொடர்பாக கூடுதல் நிபந்தனைகள் இருக்கலாம். அதேவேளை IT, வங்கி, ஆராய்ச்சி மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உயர்பதவிகள் போன்ற சில துறைகளில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மொழித் தேவைகளில் விதிவிலக்குகள் கிடைக்கலாம்.

நிரந்தர குடியிருப்பு அனுமதியான C Permit கூட சில சட்ட மீறல்கள், தவறான தகவல்கள் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சமூக உதவியைச் சார்ந்திருத்தல் போன்ற காரணங்களால் பாதிக்கப்படலாம். அதேநேரம், வேலை அல்லது கல்விக்காக நீண்டகாலம் வெளிநாட்டில் தங்க வேண்டியவர்கள் முன்கூட்டியே அதிகாரிகளின் அனுமதி பெற்று C Permit-ஐ அதிகபட்சம் நான்கு ஆண்டுகள் வரை தொடர வைத்திருக்க வாய்ப்பு உள்ளது.

மேலும், சுவிட்சர்லாந்தில் பிறந்த வெளிநாட்டு பெற்றோரின் குழந்தைகளுக்கு தானாகவே Swiss குடியுரிமை கிடைப்பதில்லை. எனவே Permit விதிகள் நாட்டினம், கன்டோன் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடும் என்பதால் அதிகாரப்பூர்வ கன்டோன் தகவல்களைச் சரிபார்ப்பது அவசியம்.




# கனடாவின் Ontario மாகாண முதலாவது AI பயன்பாட்டு இணை அமைச்சராக தமிழர் விஜய் தணிகாசலம்!

Ontario மாகாண முதலமைச்சர் Doug Ford, 2026 செப்டம்பர் 10 அன்று மேற்கொண்ட அமைச்சரவை மாற்றத்தின்போது இந்தப் புதிய பொறுப்பை விஜய் தணிகாசலத்திடம் ஒப்படைத்தார். அவர், பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வர்த்தக அமைச்சர் Victor Fedeliயுடன் இணைந்து பணியாற்றவுள்ளார்.

விஜய் தணிகாசலம் தெரிவித்தது என்ன?

தனது நியமனம் குறித்து அவர் வெளியிட்ட பதிவில்:

Ontario-வின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டு இணை அமைச்சராக நியமிக்கப்பட்டதை மிகுந்த பணிவுடனும் பெருமையுடனும் ஏற்றுக்கொள்கிறேன்.

தன்மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ள முதலமைச்சர் Doug Ford-க்கு நன்றி தெரிவித்த அவர், Ontario-வை கனடாவின் AI தலைநகரமாக மாற்றுவதே இலக்கு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி Donald Trump நிர்வாகத்தின் வர்த்தக மற்றும் சுங்கவரி நடவடிக்கைகளால் Ontario பொருளாதாரம் எதிர்கொள்ளும் அழுத்தங்களுக்கு மத்தியில், உள்நாட்டிலேயே AI தொழில்நுட்ப முதலீடுகள், நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை வளர்க்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். Ontario அரசின் அமைச்சரவை அறிவிப்பிலும் இந்த மாற்றம் அமெரிக்கச் சுங்கவரிகளுக்கு எதிரான நீண்டகால பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சுப் பதவியின் முக்கியப் பணிகள்

புதிய அமைச்சரின் விரிவான அதிகாரப்பூர்வப் பொறுப்புப் பட்டியல் இன்னும் தனியாக வெளியிடப்படவில்லை. எனினும் Ontario அரசின் தற்போதைய AI திட்டங்களின் அடிப்படையில், பின்வரும் விடயங்கள் முக்கிய கவனம் பெறக்கூடும்:

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில்

AI பயன்பாட்டை அதிகரித்தல்

உற்பத்தி, கட்டுமானம், மருத்துவம், பாதுகாப்பு மற்றும் சேவைத் துறைகளில் AI தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்

Ontario-வில் உருவாகும் AI நிறுவனங்கள் வளர உதவுதல்

முதலீடுகள் மற்றும் உயர் திறன் கொண்ட வேலைவாய்ப்புகளை ஈர்த்தல்

AI ஆராய்ச்சியை நடைமுறை வணிகப் பயன்பாடுகளாக மாற்றுதல்

தரவுப் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பான AI பயன்பாட்டை உறுதிப்படுத்துதல்

அரச சேவைகளை AI மூலம் நவீனப்படுத்துதல்

AI பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவை பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் நிறுவனங்களிடையே வளர்த்தல்

Ontario அரசின் 2026 வரவுசெலவுத் திட்டத்தின்படி, AI பயன்பாடு 2025-2035 காலப்பகுதியில் மாகாணத்தின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சுமார் 122 பில்லியன் டொலர் பங்களிப்பதுடன், ஆண்டுக்கு சராசரியாக 17,600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### யார் இந்த விஜய் தணிகாசலம்?

விஜய் தணிகாசலம் இலங்கையில் பிறந்த தமிழர். தற்போது Ontario சட்டமன்றத்தில் Scarborough–Rouge Park தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் Progressive Conservative கட்சி உறுப்பினராக உள்ளார்.

2018 முதல் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகச் செயற்படும் அவர், இதற்கு முன்னர்:

போக்குவரத்து இணை அமைச்சர்

வீடமைப்பு இணை அமைச்சர்

மனநலம் மற்றும் போதைப்பொருள் சார்பு விவகாரங்களுக்கான இணை அமைச்சர்

ஆகிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

அவர் வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டமும், Queen's University-யின் Smith School of Business நிறுவனத்தில் MBA பட்டமும் பெற்றுள்ளார். Ontario அமைச்சரவையில் இடம்பெற்ற முதலாவது தமிழ்க் கனேடியர் என்ற வரலாற்றுச் சிறப்பையும் பெற்றுள்ளார்.






# சூரிச் பொலிஸார் 12 மாதங்களில் 7,070 ரப்பர் குண்டுகள் பயன்படுத்தினர்

சூரிச்: கடந்த 2025 செப்டம்பர் முதல் சூரிச் நகர பொலிஸார் 11 சம்பவங்களில் மொத்தம் 7,070 ரப்பர் குண்டுகளை (Gummischrot) பயன்படுத்தியுள்ளதாக நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது. மொத்தம் 202 பொதிகள் பயன்ப டுத்தப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு பொதியிலும் 35 ரப்பர் குண்டுகள் உள்ளன.

அனுமதியற்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு முய ற்சிகளின்போதே இவை அதிகளவில் பயன்படு த்தப்பட்டுள்ளன. குறிப்பாக மே 1 பின்னர் நடைபெற்ற அனுமதியற்ற ஆர்ப்பாட்டத்தில் மட்டும் 1,715 ரப்பர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

ரப்பர் குண்டுகளால் கண் உள்ளிட்ட கடுமையான காயங்கள் ஏற்படும் அபாயம் குறித்து விமர்சனங்கள் தொடர்ந்தாலும், வன்முறையில் ஈடுபடும் குழுக்களை பாதுகாப்பான தூரத்தில் வைத்திருக்க தற்போதைக்கு இதற்கு பொருத்தமான மாற்று இல்லை என சூரிச் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# உலகின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏன் சுவிட்சர்லாந்தைத் தேடி வருகின்றன?

போர்களும் சர்வதேச மோதல்களும் வெடிக்கும் போது, எதிர்த்தரப்பினரை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதில் Switzerland பல தசாப்தங்களாக முக்கிய மத்தியஸ்த நாடாக செயல்பட்டு வருகிறது. சமாதானத்தை ஊக்குவிப்பது சுவிஸ் அரசியலமைப்பிலும் இடம்பெற்றுள்ளதுடன், இதன் ஒரு பகுதியாக "Gute Dienste - Good Offices" சேவைகளை நாடு வழங்குகிறது. அண்மைக் காலங்களில் 20-க்கும் மேற்பட்ட நாடுகளில் 30-க்கும் அதிகமான சமாதான செயல்முறைகளில் சுவிஸ் வெளியுறவுத்துறை பங்கேற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் மையப்பகுதியில் அமைந்துள்ள புவியியல் நிலை, சிறந்த போக்குவரத்து இணைப்புகள், திறமையான நிர்வாகம் ஆகியவற்றுடன், பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட மத்தியஸ்த நிபுணத்துவமும் Switzerland-ன் முக்கிய பலமாக உள்ளது. ETH Zuerich-ன் Center for Security Studies மற்றும் swisspeace போன்ற அமைப்புகளிலும் இந்த நிபுணத்துவம் வளர்க்கப்பட்டுள்ளது.

சுவிஸ் மத்தியஸ்தத்தின் அடிப்படை அம்சங்கள் நம்பிக்கை, இரகசியத்தன்மை, விடாமுயற்சி மற்றும் நடுநிலைமை என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது மனிதாபிமான சேவை மட்டுமல்ல. சமாதான மத்தியஸ்தத்தின் மூலம் சிறிய நாடான Switzerland, சர்வதேச அரங்கில் தனது செல்வாக்கையும் பேச்சுவார்த்தை வலிமையையும் அதிகரித்துக் கொள்ள முடிகிறது. Washington போன்ற அதிகார மையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும், உலகளாவிய நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் இது உதவுகிறது.

அதேநேரம் இந்தப் பணியில் சவால்களும் உள்ளன. சர்ச்சைக்குரிய தரப்புகளுடன்கூட பேச வேண்டியிருப்பதால், Switzerland அரசியல் மற்றும் நற்பெயர் சார்ந்த விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

இன்றைய உலகில் தனியாக மத்தியஸ்தம் செய்வதைவிட கூட்டு மத்தியஸ்தம் முக்கியத்துவம் பெறுகிறது. இதன் ஒரு பகுதியாக Switzerland, Qatar, South Africa மற்றும் Oman ஆகிய நாடுகளுடன் மத்தியஸ்த ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளது.


Sj
சிறி ஜுவெல்லரி
உங்கள் ரசனைக்கேற்ப புதிய தங்க நகைகளை வாங்கவும் புதிய டிசைன்களில் ஆபரணங்களை செய்து கொள்ளவும், பழைய தங்கங்களை உருக்கி, புதிய தங்க நகைகள் செய்து கொள்ளவும், விரைவாக திருத்த வேலைகளும் செய்தும் தரப்படும்.
நகைத்தொழிலில் நீண்ட காலம் அனுபவம் பெற்ற நாங்கள் தாலிக்கு பொன் உருக்கி வைரதாலிக்கொடி செய்து தருகிறோம்.
வைர தாலி கொடி. மோதிரம், வளையல், பெயர் பெண்டன் மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
Sj SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01


Aathi
RESIDENCIES
Alles Garden, Trincomalee
LUXURY APARTMENTS FOR SALE
Experience a new lifestyle at Alles Garden, Trincomalee's premium residences.
Pay just 30% now
Balance payable monthly with 0% interest
Book Your Site Visit Today
Mr. Srikaran
+41 79 136 4465
+94 77 710 0050


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
ATTA RICE
BASMATI RICE
TATA TEA
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் –
எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான
நம்பகமான மற்றும் தொழில்முறை
கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம்
•
நம்பிக்கை
•
தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில்
நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


நல்லூரின் இதயத்தில்
உலகத் தரச் சொகுசு
அனுபவம்
"WORLD-CLASS
LUXURY
EXPERIENCE
IN THE HEART OF
NALLUR"
SPECIAL
OFFER
10% OFF
Exclusive Offer
Valid Through
31 DECEMBER 2026
Use Promo Code:
CH2026
Suisse
RESIDENCY
SWISS COMFORT, JAFFNA SOUL.
booking@suisseresidency.lk
+94 21 221 08 88
www.suisseresidency.lk
+94 77 877 90 00



# இத்தாலி ஜெனோவாவில் சைவத் தமிழ் மன்றத்தின் புனரமைக்கப்பட்ட வழிபாட்டு மண்டபம் திறப்பு




இத்தாலியின் ஜெனோவா மாநகரில் அமைந்துள்ள தமிழர் இல்லத்தில், சைவத் தமிழ் மன்றத்தின் புனரமைக்கப்பட்ட வழிபாட்டு மண்டபம் ஞாயிற்றுக்கிழமை (13.09.2026) மங்கலகரமாகத் திறந்துவைக்கப்பட்டது.

திறப்பு விழாவை முன்னிட்டு, சனிக்கிழமை (12.09.2026) இரவு 8 மணிக்கு சர்வதேச இந்துமதக் குரு இ.சிவசண்முகநாதக் குருக்கள் தலைமையில் ஆகம முறைப்படி சாந்திக் கிரியைகள் நடைபெற்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு Piazza Romagnosi பகுதியில் ஒன்றுகூடிய அடியார்கள், தேவாரப் பதிகங்களைப் பாடியவாறு தமிழர் இல்லத்தை நோக்கி வீதி உலா வந்தனர். பிள்ளையார், சிவன்-பார்வதி மற்றும்





சுப்பிரமணியப் பெருமான் திருக்கோலங்களில் சிறுவர்கள் பங்கேற்றமை நிகழ்வுக்கு ஆன்மீகச் சிறப்பைச் சேர்த்தது.

இதனைத் தொடர்ந்து அங்குரார்ப்பணம், கணபதி யாகம் உள்ளிட்ட கிரியைகள் நடைபெற்றதுடன், சங்கற்ப வழிபாடுகளின் பின்னர் திருவுருவப் படங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. காலை 10.12 மணிக்குப் பின்னர் வழிபாட்டு மண்டபம் அதிகாரபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

சைவத் திருவாளர் சின்னத்துரை தனபாலா வரைந்து வழங்கிய நந்திக்கொடி நிகழ்வில் சிறப்பிடம் பெற்றது. சுவிற்சர்லாந்திலிருந்து உலக ஆன்மீகக் கட்டமைப்பின் பொறுப்பாளர் வேலுப்பிள்ளை கணேசகுமார் வழங்கிய உதவியுடன் குருக்கள் ஜெனோவாவுக்கு அழைத்து வரப்பட்டதாக மன்றம் தெரிவித்துள்ளது.

இளைய தலைமுறையினருக்குச் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளையும் முறையான வழிபாட்டு நெறிகளையும் எடுத்துரைப்பதே இந்த வழிபாட்டு மண்டபத்தின் பிரதான நோக்கம் என சைவத் தமிழ் மன்றம் தெரிவித்துள்ளது.

“வேத நெறி தழைத்தோங்கட்டும்; மிகு சைவத்துறை விளங்கட்டும்!”

**தகவல்: சைவத் தமிழ் மன்றம்**











# Zuerich-Buchs நகரில் சிறப்பாக நடைபெற்ற இரு சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்

திரு-திருமதி புவனேஸ்வரராஜா தம்பதியினரின் இரு புதல்விகள் நடனம், அபிநயம் மற்றும் முகபாவனைகளால் பார்வையாளர்களைக் கவர்ந்தனர்.

Switzerland, Zürich மாநிலத்தின் அழகிய Buchs நகரில், திரு-திருமதி புவனேஸ்வரராஜா தம்பதியினரின் இரு புதல்விகளுடைய பரதநாட்டிய அரங்கேற்றம் 12.09.2026 சனிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோணேஸ்வர நடனாலயத்தின் நடன ஆசிரியர் மதிவதனி சுதாகரன் அவர்களின் மாணவிகளான இரு சகோதரிகளும், தங்களது நடனத் திறமை, நேர்த்தியான அபிநயம் மற்றும் உணர்வுபூர்வமான முகபாவனைகள் மூலம் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இசையும் நடனமும் இணைந்த அழகிய அரங்கேற்றம்நி கழ்வில் இடம்பெற்ற:

வாய்ப்பாட்டு
மிருதங்கம்
புல்லாங்குழல்
வயலின்
ஜதி மற்றும் தாள வாத்தியங்கள்
அனைத்தும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுடன்



அழகாக ஒருங்கிணைந்து, அரங்கேற்றத்திற்குச் சிறப்புச் சேர்த்தன. இனிமையான பாடல்கள், துல்லியமான ஜதிகள் மற்றும் திறமையான இசைக் கலைஞர்களின் பங்களிப்பு பார்வை யாளர்களுக்கு சிறந்த கலை அனுபவத்தை வழங்கியது.

அரங்கு நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

இரு மாணவிகளின் திறமையும் அர்ப்பணிப்பும், ஆசிரியரின் பயிற்சியும், பெற்றோரின்





ஊக்கமும் ஒன்றிணைந்த ஒரு மனநிறைவான கலை நிகழ்வாக இந்த அரங்கேற்றம் அமைந்தது.

பரதநாட்டியக் கலையில் இரு சகோதரிகளும் மென்மேலும் வளர்ந்து பல சாதனைகளைப் படைக்க SUPEEDSAM தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

அவர்களைப் பெற்று வளர்த்து, கலைப் பயிற்சி வழங்கி, சிறப்பான முறையில் அரங்கேற்றத்தை நடத்திய திரு-திருமதி புவனேஸ்வரராஜா தம்பதியினருக்கும் மனமார்ந்த பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்!

**வாழ்க வளமுடன்! வளர்க கலைப்பணி!**














TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen, Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie
25 % Rabatt für November!
Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Zähringerstrasse 32 | 8001 Zürich
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10 | taminaa.ch | Zähringerstrasse 32 8001 Zürich
TAMINAA – Ihre Gesundheit in besten Händen


சுபீட்சம்
பத்திரிகை
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதலாக...
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....
CLICK HERE

# SKT Jewellery & Textiles
# நாதன் கடை திறப்புவிழா

**14.09.2026 Hardtumstrasse135, 8005 Zuerich, Switzerland**










வீடியோவை பார்வையிட **CLICK HERE**









# SKT Jewellery & Textiles
# நாதன் கடை திறப்புவிழா

14.09.2026 Hardtumstrasse135, 8005 Zuerich, Switzerland
















LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!
சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.
BEST PRICE
எமது சேவைகள்:
ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்
உங்கள் தேவைகளை தமிழில் பேசி. தரமாகப் பெற்றிடுங்கள்!
சிறப்பம்சங்கள்:
இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.
VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch
GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch
NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch
இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96
www.lamelle-glass.ch


7/24
DEPANNAGE URGENCE
022 782 08 88
LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier


ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
NOLIMIT ONE
GmbH
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE


ஆவே மரியா சுவிஸ் தமிழ்க்குழு அழைத்துச்செல்லும்
இத்தாலி நாட்டில் பாதுவா நகரில்
தூய அந்தோனியாரின் அழியாத நாக்கும்,
புனித உடலும் உள்ள திருத்தலத்திற்கும்
முன்று ரோஜா அன்னையின்
திருத்தலத்திற்கும்
புனித யாத்திரை
2026
AVE MARIA - SWISS TAMIL GROUP
காலம் : 24-10-2026 சனிக்கிழமை காலை புறப்பட்டு,
25-10-2026 ஞாயிற்றுக்கிழமை இரவு திரும்புவது
2 நாள் பயணம்
1 இரவு தங்குவது
3 நேர உணவு மற்றும்
திருப்பலிகளும் இடம்பெறும்.
புறப்படும் இடங்கள் : பேர்ன், கொலுத்தாண், பாசல், சூரிச், லூசேர்ன்
தொடர்புகளுக்கு : வின்சன் - 079 209 07 76
யேசு - 076 371 28 81


"அனைத்து
விடயங்களும்
மக்களுக்காகவே"
www.supeedsam.com
இங்கே
கிளிக்
செய்க


VM Cars
9 SEATER VAN
FOR RENT
Perfect for families, friends & groups
VM Cars
9 SEATS
EXTRA LONG VERSION
AUTOMATIC
REAR PARKING SENSORS
PER DAY CHF
130.-
400 KM PER DAY
UNLIMITED KM ON REQUEST
WEEKLY RENTAL WITH DISCOUNT ON REQUEST
BOOK NOW
WhatsApp +41 79 510 21 68
vmcars.ch@gmail.com
Instagram VMCars.ch
Spreitenbach AG / Dietikon ZH


VTS
Finance GmbH
IMMOBILIEN • HYPOTHEKEN • FINANZIERUNGEN • VERSICHERUNGEN
IHRE ZIELE.
UNSERE LÖSUNGEN.
Kompetent, persönlich und zuverlässig – für Ihre finanzielle Zukunft.
IHRE ZUKUNFT IN GUTEN HÄNDEN
NEU
IMMOBILIEN
Ihr Partner rund um Immobilien
Kauf & Verkauf
Immobilienvermitttung
Bewertung
Beratung bei Wohn- und Renditeobjekten
HYPOTHEKEN & FINANZIERUNGEN
Individuelle Lösungen zu besten Konditionen
Hypotheken für Wohneigentum
Hypothekenablösungen & Aufstockungen
Bau- & Renovations-Finanzierungen
Firmenfinanzierungen
Privatkredite
VERSICHERUNGEN
Optimaler Schutz für Sie und Ihre Liebsten
Krankenversicherungen
Lebensversicherungen
Vorsorge 3a & 3b
Fahrzeugversicherungen
Hausrat- & Privathaflpflichtversicherungen
Gebäudeversicherungen
Firmen- & Geschäfts-versicherungen
KREDITE
Schnell, unkompliziert und diskret
Privatkredite
Konsumentenkredite
Firmenkredite
Liquiditätslösungen
CHF
PERSÖNLICHE BERATUNG
Individuell auf ihre Bedurnisse abgestistmmt.
KOMPETENZ & ERFAHRUNG
Jahrelange Erlahrung und fundiertes Inow-how.
ZUVERLÄSSIG & TRANSPARENT
Faire Lösungen und klare Kommunikation.
SICHERHEIT & VERTRAUEN
Ihre Zufniedheit is it unser oberstes Ziel.
WIR SCHAFFEN WERTE.
FÜR HEUTE UND MORGEN.
Ob Immobille, Hypothek, Finanzierung oder Versicherung – wir begleiten Sie auf ihrem Weg zu finanzieller Sicherheit und nachhaltigem Erfolg.
Ganzheltiche Beratung
Beste Konditionen
Schnelle Abwicklung
Langfristige Partnerschaft
RUFEN SIE UNS AN
078 920 58 58
Wir sind gerne für Sie da.
SCHREIBEN SIE UNS
info@vtsfinance.ch
Wir antworten schnell.
V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz
Ihr Vertrauen. Unsere Verantwortung. Gemeinsam in eine sichere Zukunft.




# Online Shopping-ஐ இனி AI Agent-கள் நடத்துமா?

## சுவிஸ் வியாபாரிகள் எதிர்பார்க்கும் புதிய மாற்றம்!

சுவிட்சர்லாந்தின் Online Shopping துறையில் Generative AI வேகமாக நுழைந்து வருகிறது. Fachhochschule Nordwestschweiz (FHNW) வெளியிட்ட புதிய ஆய்வின்படி, கணக்கெடுக்கப்பட்ட Online Händler-களில் ஏற்கனவே 10 பேரில் ஒருவர், KI-Agent-கள் மூலம் நடைபெறும் Shopping தங்களது விற்பனைக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

KI-Agent என்பது கேள்விகளுக்கு பதிலளிக்கும் சாதாரண Chatbot மட்டுமல்ல. பயனரின் சார்பில் பொருட்களைத் தேடுதல், விலைகளை ஒப்பிடுதல், பொருத்தமான பொருட்களைப் பரிந்துரைத்தல் மற்றும் சில சூழ்நிலைகளில் கொள்முதல் நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடிய AI மென்பொருளாகும்.

ஆய்வில் பங்கேற்ற Online Händler-களில் 75% பேர் எதிர்காலத்தில் AI பொருட்களைத் தேடும் எனவும், 74% பேர் விலைகளை






ஒப்பிடும் எனவும், 71% பேர் பொருட்களைப் பரிந்துரைக்கும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் AI தானாகவே இறுதி கொள்முதல் முடிவை எடுக்கும் நிலை குறித்து வியாபாரிகள் இன்னும் எச்சரிக்கையாக உள்ளனர். 32% பேர் AI தானாக வாங்கும் முடிவை எடுக்கும் நிலை உருவாகலாம் எனவும், 22% பேர் முழு கொள்முதல் செயல்முறையையும் AI மேற்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

பல Online Shops-ஐ தனித்தனியாகத் திறந்து விலை மற்றும் பொருட்களை ஒப்பிடுவதற்குப் பதிலாக, எதிர்காலத்தில் ஒரு AI Agent நமது தேவைக்கு ஏற்ற பொருட்களைத் தேடி விலை ஒப்பீடு செய்து சிறந்த தெரிவுகளை முன்வைக்கலாம்.

அதேநேரம், AI எந்த அடிப்படையில் ஒரு பொருளைப் பரிந்துரைக்கிறது? எந்த Online Shop-களை முன்னிலைப்படுத்துகிறது? தவறான பரிந்துரை அல்லது தானியங்கி கொள்முதல் ஏற்பட்டால் பொறுப்பு யாருக்கு? போன்ற முக்கிய கேள்விகளும் எழுகின்றன.

Online Händler-களில் 81% பேர் AI பயன்பாட்டால் நேரத்தைச் சேமிப்பதாக தெரிவித்துள்ளனர். Research, translation, product descriptions, data analysis, programming மற்றும் customer enquiries போன்ற பணிகளில் AI ஏற்கனவே பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் முழுமையாக AI மட்டுமே இயக்கும் செயல்முறைகள் இன்னும் அரிது. மேலும், கணக்கெடுக்கப்பட்ட நிறுவனங்களில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கினரிடம் இன்னும் AI அல்லது Agentic-Commerce Strategy இல்லை; முழுமையாக நடைமுறைப்படுத்தியவர்கள் 2% மட்டுமே.




# ஐரோப்பாவில் மீண்டும் No.1 - Zuerich HB தொடர்ந்து 5 வது ஆண்டாக முதலிடம்!

தேர்வு செய்யப்பட்டுள்ளது.

European Railway Station Index 2026 தரவரிசையில் Zuerich HB முதலிடத்தை பெற்றுள்ளது. தொடர்ந்து 5வது ஆண்டாக Zuerich இந்தச் சாதனையைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஆய்வில் ஐரோப்பாவின் மிகவும் பரபரப்பான 60 ரயில் நிலையங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. ரயில்களின் நம்பகத்தன்மை, தாமதம் மற்றும் காத்திருப்பு நேரம், பயணிகளுக்கான வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல், இலவச Wi-Fi, ரயில் இணைப்புகள் மற்றும் Ticket வசதிகள் உள்ளிட்ட பல அம்சங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**சுவிஸ் ரயில் நிலையங்களின் சிறப்பு**

* Zuerich HB - 1வது இடம்
* Bern HB - 5வது இடம்
  (Paris Montparnasse உடன் சமநிலை)
* Luzern HB - 14வது இடம்

Zuerich HB-இல் ரயில் சேவைகளின் தாமத விகிதம் சுமார் 4% மட்டுமே என அறிக்கை குறிப்பிடுகிறது. Bern HB-இல் அது 1.8%, Luzern HB-இல் வெறும் 0.3% என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆய்வில் இடம்பெற்ற நிலையங்களில் Luzern HB மிகக் குறைந்த தாமத விகிதத்தைக் கொண்ட நிலையமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் மிகப் பரபரப்பான ரயில் நிலையங்களுடன் ஒப்பிடும்போது, நேர்த்தி, நம்பகத்தன்மை மற்றும் பயணிகளுக்கான சேவை வசதிகள் ஆகியவற்றில் சுவிஸ் ரயில் போக்குவரத்து தொடர்ந்து உயர்ந்த தரத்தைப் பேணுவதை இந்தத் தரவரிசை எடுத்துக்காட்டுகிறது.




# AI-யுடன் பேசுங்கள்; ஆனால் மனிதர்களுடன் வாழ்வதை மறந்துவிடாதீர்கள்!

செயற்கை நுண்ணறிவு Chatbot-களுடன் உரையாடுவதும், அவற்றிடம் தனிப்பட்ட உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதும் தற்போது அதிகரித்து வருகிறது.

அவை கவனமாகக் கேட்கின்றன, ஆறுதல் கூறுகின்றன, பல சந்தர்ப்பங்களில் பயனரின் கருத்துக்கும் ஆதரவளிக்கின்றன. ஆனால் இந்த நெருக்கம் மனித உறவுகளை எவ்வாறு பாதிக்கிறது என்ற கேள்வி எழுந்துள்ளது.

உண்மையான சமூக உறவுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் AI துணைச் சேவைகள் உணர்ச்சிசார் சார்புநிலை அல்லது அடிமைத்தன்மையை உருவாக்கலாம் என்ற அச்சம் காரணமாக, சீனாவில் 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான AI துணைச் சேவைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

Zuerich பல்கலைக்கழகத்தில் மனிதர்களுக்கும் Chatbot-களுக்கும் இடையிலான உறவு குறித்து ஆய்வு செய்யும் Nadja Rupprechter, AI Chatbot-கள் மனித உறவுகளுக்கு உதவவும் முடியும்; பாதிப்பையும் ஏற்படுத்தலாம் எனத் தெரிவிக்கிறார்.

## ஏற்படக்கூடிய நன்மைகள்

சிலருக்கு Chatbot உரையாடல்கள் பாதுகாப்பான பயிற்சிக் களமாக அமைகின்றன. கூச்சம் கொண்டவர்கள் சமூகச் சூழ்நிலைகளில் எவ்வாறு பேசுவது என்பதைப் பயிற்சி செய்யவும், பின்னர் நிஜ வாழ்க்கையில் மற்றவர்களுடன் எளிதாக உரையாடவும் இது உதவலாம்.

யாரும் உடனடியாகப் பேசக் கிடைக்காத நேரங்களில், AI தற்காலிகமாகத் துணையாகவும் தகவல் வழங்கும் கருவியாகவும் இருக்கலாம்.




### ஏற்படக்கூடிய பாதிப்புகள்

பல AI துணைச் செயலிகள் பயனரின் கருத்தை அடிக்கடி ஏற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மனித உறவுகளில் ஏற்படும் முரண்பாடுகள் குறித்து Chatbot-இடம் பேசும்போது, பயனர் தனது நிலைப்பாடு மட்டுமே சரியானது என மேலும் உறுதியாக நம்பக்கூடும்.

இதனால் மன்னிப்புக் கேட்கும் மனப்பான்மை, மற்றவரின் பார்வையைப் புரிந்துகொள்ளும் திறன் மற்றும் தனது நடத்தையை மாற்றிக்கொள்ளும் விருப்பம் குறையக்கூடும். அளவுக்கு அதிகமான பயன்பாடு நிஜமான மனித உறவுகளிலிருந்து விலகுவதற்கும் தனிமை உணர்வு அதிகரிப்பதற்கும் தொடர்புடையதாக ஆரம்பகட்ட ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் Chatbot பயன்பாடே நேரடியாகத் தனிமையை உருவாக்குகிறது என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. தனிமையாக உணர்பவர்கள் ஏற்கெனவே AI-ஐ அதிகம் பயன்படுத்துகிறார்களா என்பதையும் பிரித்தறிய மேலதிக ஆய்வுகள் தேவை.

### நிபுணர்களின் அறிவுரை

AI மனித உறவுகளுக்குப் பதிலாக இருக்கக்கூடாது; அவற்றை நிறைவு செய்யும் ஒரு துணைக் கருவியாக மட்டுமே இருக்க வேண்டும்.

மனநல நெருக்கடி, ஆபத்தான சூழ்நிலை அல்லது தீவிரமான தனிமை ஏற்பட்டால் Chatbot-ஐ மட்டும் நம்பாமல், குடும்பத்தினர், நண்பர்கள், மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள் அல்லது ஆலோசனை மையங்களை அணுகுவது அவசியம்.

# வெப்பம் மனிதர்களை மட்டுமல்ல - சுவிட்சர்லாந்தின் ஆறுகளுக்குள் வாழும் உயிரினங்களையும் மாற்றத் தொடங்கியுள்ளது

### 2026 வறட்சியின் தாக்கம் இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கலாம்




2026-ஆம் ஆண்டின் கடுமையான வெப்பமும் வறட்சியும் சுவிட்சர்லாந்தின் ஆறுகள் மற்றும் மீன் வளத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மீன்வள நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

குறிப்பாக Forelle (Trout) மீன்கள் வழக்கத்தைவிட மெலிந்த நிலையில் காணப்படுகின்றன. அதிக வெப்பம் மற்றும் நீர்மட்டக் குறைவு காரணமாக மீன்களின் உணவு வளம் குறைந்ததுடன், கடுமையான அழுத்தநிலையில் மீன்கள் உணவு உட்கொள்வதையே நிறுத்திவிடக்கூடும் என Bern மீன்வள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

Bern மாகாண மீன்வள ஆய்வகத்தின் மதிப்பீட்டின்படி, 2026 வெப்பமான கோடைக்காலத்தில் பல மில்லியன் மீன்கள் உயிரிழந்துள்ளன. அவற்றில் இந்த ஆண்டில் முட்டையிலிருந்து வெளிவந்த ஏராளமான இளம் மீன்களும் அடங்குகின்றன.

அதேநேரம் Bern மாகாணத்தில் 100 கிலோமீட்டருக்கும் அதிகமான நீர்நிலைகளிலிருந்து 100,000-க்கும் மேற்பட்ட மீன்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாதிப்பு மீன்களின் உடல் எடையுடன் மட்டும் முடிவடையவில்லை. பெண் மீன்களின் முட்டைகள் சாதாரண ஆண்டுகளைப் போன்று முழுமையாக வளர்ச்சியடையாததால், இந்த இலையுதிர் மற்றும் குளிர்கால இனப்பெருக்கமும் பாதிக்கப்படலாம் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இதன் விளைவுகள் இன்னும் பல ஆண்டுகளுக்கு உணரப்படலாம் என்பதும் முக்கிய கவலை.

இதனால் Bern, Solothurn மற்றும் Basel-Landschaft உள்ளிட்ட சில மாகாணங்களின் குறிப்பிட்ட ஆறுகள் மற்றும் பகுதிகளில் தற்காலிக மீன்பிடித் தடைகளும் அமல்படுத்தப்பட்டுள்ளன.

சுவிஸ் மீன்பிடி சம்மேளனம், இந்த கோடைக்காலத்தை ஒரு “எச்சரிக்கை மணி” எனக் குறிப்பிடுகிறது. ஆறுகளின் இயற்கை மீளுருவாக்கம், போதுமான நீரோட்டம், நிழல் மற்றும் மீன்கள் ஒதுங்குவதற்கான இயற்கையான வாழிடங்களை அதிகரிக்க அரசியல் நடவடிக்கை தேவை என்றும் வலியுறுத்துகிறது.

# Switzerland- இல் ஆண்டுதோறும் சுமார் 2,500 பெண்களுக்கு மகளிர் புற்றுநோய்




Switzerland-இல் ஆண்டுதோறும் சுமார் 2,500 பெண்களுக்கு மகளிர் இனப்பெருக்க உறுப்புகள் தொடர்பான புற்றுநோய்கள் புதிதாகக் கண்டறியப்படுகின்றன. கருப்பை வாய், கருப்பையின் உள்சவ்வு, சினைப்பை, வெளிப்புற பெண் பிறப்புறுப்பு மற்றும் யோனி ஆகிய பகுதிகளில் இவ்வகை புற்றுநோய்கள் ஏற்படலாம்.

சினைப்பை புற்றுநோய் (Ovarian Cancer) ஆரம்ப நிலையில் தெளிவான அறிகுறிகளைக் காட்டுவது குறைவு. இதனால் நோய் ஏற்கனவே பிற உறுப்புகளுக்குப் பரவிய நிலையிலேயே கண்டறியப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளதாக CHUV நிபுணர் விளக்குகிறார்.

### இந்த அறிகுறிகளை அலட்சியம் செய்யாதீர்கள்

உடலுறவுக்குப் பின்னர் இரத்தப்போக்கு, மாதவிடாய் நிறைவுக்குப் பின்னர் மீண்டும் இரத்தப்போக்கு, மாதவிடாய் சுழற்சியில் குறிப்பிடத்தக்க மாற்றம், வெளிப்புற பிறப்புறுப்பில் தோல் நிறம் அல்லது அமைப்பில் மாற்றம் மற்றும் அரிப்பு போன்றவை மருத்துவ ஆலோசனை பெற வேண்டிய எச்சரிக்கை அறிகுறிகளாக இருக்கலாம்.

சினைப்பை புற்றுநோயில் வயிற்றின் சுற்றளவு அதிகரித்தல் அல்லது காரணம் தெரியாத சிறிய எடை மாற்றம் போன்ற தெளிவற்ற அறிகுறிகளும் ஏற்படலாம்.

கருப்பையின் உள்சவ்வு, கருப்பை வாய் மற்றும் வெளிப்புற பெண் பிறப்புறுப்பில் ஏற்படும் சில புற்றுநோய்கள் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் குணமடையும் வாய்ப்பு 90% வரை இருக்கலாம் என நிபுணர் கூறுகிறார்.

கருப்பை வாய் மற்றும் யோனி புற்றுநோய்களுடன் நீண்டகால HPV தொற்று தொடர்புடையது. இளம்வயதில் HPV தடுப்பூசி பெறுவது முக்கியமான தடுப்பு நடவடிக்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.




# சூரிச் நகர ஊழியர்களுக்கு 3 மணி நேர இலவச உளவியல் ஆலோசனை!

சூரிச் நகர நிர்வாகம் தனது ஊழியர்களின் மனநலத்தைப் பாதுகாக்கும் நோக்கில், ஒவ்வொரு ஊழியரும் அதிகபட்சமாக 3 மணி நேர உளவியல் ஆலோசனையை இலவசமாக பெறும் திட்டத்தை நிரந்தரமாக்க விரும்புகிறது.

இந்தத் திட்டம் தற்போது 2027 இறுதி வரை சோதனை அடிப்படையில் நடைமுறையில் உள்ளது. அதன் பின்னர், 2028 ஜனவரி 1 முதல் நிரந்தரமாக அமுல்படுத்த சூரிச் நகரசபை திட்டமிட்டுள்ளது. இதற்காக ஆண்டுக்கு சுமார் CHF 250,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு Gemeinderat-இன் ஒப்புதல் இன்னும் தேவை.

முக்கிய புள்ளிவிவரங்கள்

3 மணி நேரம் – ஊழியருக்கு இலவச உளவியல் ஆலோசனை

CHF 250,000 – ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட செலவு

737 ஊழியர்கள் – 2023-2025 சோதனைக் காலத்தில் ஆலோசனைக்கு பதிவு செய்தவர்கள்

01.01.2028 – நிரந்தரமாக்க திட்டமிடப்பட்ட தேதி

மூன்று மணி நேரத்திற்கு மேல் ஆலோசனை தேவைப்பட்டால், அதற்கான செலவை ஊழியர்களே ஏற்க வேண்டும்.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் மனஅழுத்தம் மற்றும் உளவியல் சிக்கல்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உதவி வழங்குவது. இதன்மூலம் மனநலக் காரணங்களால் ஏற்படும் வேலை விடுப்புகளைக் குறைப்பதுடன், ஊழியர்களின் செயல்திறனை மேம்படுத்தி, சூரிச் நகரத்தை கவர்ச்சிகரமான பணியிடமாக வைத்திருப்பதும் இலக்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023-2025 காலத்தில் இந்தச் சேவையைப் பயன்படுத்திய ஊழியர்களிடையே திருப்தி மிகவும் உயர்வாக இருந்ததாக நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.




# சுவிட்சர்லாந்தில் சைக்கிள் பயணம் ஏன் அதிக ஆபத்தானது?

சைக்கிள் பயணம் சுற்றுச்சூழலுக்கும் உடல்நலத்திற்கும் நன்மையானது. ஆனால் அதனை ஊக்குவிப்பதற்கு முன்பு, பாதுகாப்பான வீதிக் கட்டமைப்பை உருவாக்குவது அவசியம்.

விபத்துகளைத் தவிர்ப்பது சைக்கிள் பயணிகளின் பொறுப்பு மட்டுமல்ல; பாதுகாப்பான பாதைகளை ஏற்படுத்துவது அரசாங்கம் மற்றும் நகர நிர்வாகங்களின் பொறுப்புமாகும்.

நெதர்லாந்தைவிட விபத்து விகிதம் இருமடங்கு - வீதிக் கட்டமைப்பே முக்கிய காரணமா என்ற வினா ஆய்வாளர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் சைக்கிள் பயணம் வேகமாகப் பிரபலமடைந்து வருகிறது. ஆனால் பாதுகாப்பு விடயத்தில் இன்னும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருப்பதாக புதிய சர்வதேச ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

2019 முதல் 2022 வரையான சைக்கிள் விபத்துத் தரவுகளை ஆராய்ந்த ஆய்வாளர்கள், பயணிக்கப்பட்ட தூரத்தின் அடிப்படையில் சுவிட்சர்லாந்தையும் நெதர்லாந்தையும் ஒப்பிட்டுள்ளனர்.

**முக்கியப் புள்ளிவிவரம்**

ஒவ்வொரு 100,000 கிலோமீற்றர் சைக்கிள் பயணத்திற்கும் பதிவான சராசரி விபத்துகள்:

□□ சுவிட்சர்லாந்து - 0.19

□□ நெதர்லாந்து - 0.09

இதன்படி, சுவிட்சர்லாந்தில் சைக்கிள் விபத்து விகிதம் நெதர்லாந்தைவிட சுமார் இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.

இந்த ஆய்வுக்காக இரு நாடுகளிலும் பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்ட

86,000-க்கும் அதிகமான சைக்கிள் விபத்துகள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

அதிக ஆபத்துள்ள மூன்று இடங்கள் சுவிட்சர்லாந்தில் கீழ்க்கண்ட பகுதிகளில் சைக்கிள் பயணிகள் அதிக ஆபத்தை எதிர்கொள்வதாக ஆய்வு தெரிவிக்கிறது:

**1. பஸ் மற்றும் டிராம் நிறுத்தங்கள்**

பொதுப் போக்குவரத்து வாகனங்கள், ஏறும்-இறங்கும் பயணிகள் மற்றும் சைக்கிள்கள் ஒரே குறுகிய இடத்தைப் பயன்படுத்துவதால் மோதல் அபாயம் உருவாகிறது.

**2. டிராம் தண்டவாளங்கள்**

சைக்கிள் சக்கரம் தண்டவாளத்தின் இடைவெளியில் சிக்கிக்கொள்ளும்போது, பயணி நிலைதடுமாறி விழும் அபாயம் அதிகரிக்கிறது.

**3. வீதிச் சந்திப்புகள்**

திரும்பும் வாகனங்கள், தெளிவற்ற சைக்கிள் பாதைகள் மற்றும் தனியான சமிக்ஞை விளக்குகள் இல்லாமை விபத்துகளுக்குக் காரணமாக அமையலாம்.

## நெதர்லாந்தின் பாதுகாப்பு முறை

நெதர்லாந்தின் பல நகரங்களில் சைக்கிள் பாதைகள், வாகனப் பாதைகள் மற்றும் பயணிகள் காத்திருக்கும் பகுதிகளிலிருந்து தெளிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, பஸ் மற்றும் டிராம் நிறுத்தங்களின் முன்புறமாக அல்லாமல் பின்புறமாகச் சைக்கிள் பாதைகள் அமைக்கப்படுகின்றன.

இதனால் சைக்கிள் பயணிகளும் பொதுப் போக்குவரத்துப் பயணிகளும் நேரடியாக மோதும் வாய்ப்பு குறைகிறது.

## வேக வரம்பும் முக்கியம்

மணிக்கு 50 கிலோமீற்றர் வேக வரம்புள்ள வீதிகளில் சைக்கிள் விபத்து ஏற்படும் சாத்தியம், மணிக்கு 30 கிலோமீற்றர் வேக வரம்புள்ள வீதிகளைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

## சுவிட்சர்லாந்து என்ன செய்யலாம்? சைக்கிள் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக:

- பாதுகாக்கப்பட்ட தனிச் சைக்கிள் பாதைகளை அமைத்தல்
- பஸ் மற்றும் டிராம் நிறுத்தங்களை மறுவடிவமைத்தல்
- சந்திப்புகளில் சைக்கிள்களுக்குத் தனியான சமிக்ஞை விளக்குகளை நிறுவுதல்
- டிராம் தண்டவாளங்களில் சக்கரங்கள் சிக்குவதைத் தடுக்கும் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்துதல்

தனிப் பாதை அமைக்க முடியாத பகுதிகளில் வேக வரம்பைக் குறைத்தல்

போன்ற நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.




# மின்னல் தாக்க அடர்த்தியில் ஐரோப்பாவில் இரண்டாவது இடத்தில் Switzerland!

2026 கோடைக்காலத்தில் நிலப்பரப்பின் அளவுடன் ஒப்பிடப்பட்ட மின்னல் தாக்க அடர்த்தியில், Switzerland ஐரோப்பாவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. மின்னல் கண்காணிப்பு நிறுவனமான Météor-age வெளியிட்ட தரவுகளின்படி, ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் Switzerland முழுவதும் மேகத்திலிருந்து நிலத்தைத் தாக்கிய 22,158 மின்னல்கள் பதிவாகியுள்ளன.

இந்தக் கோடைக்காலத்தில் அதிக மின்னல் தாக்கங்கள் பதிவான நாள் ஆகஸ்ட் 28 ஆகும். அன்றைய ஒரே நாளில் நாடு முழுவதும் 1,886 மின்னல்கள் பதிவாகின. மாநிலங்களின் அடிப்படையில் Bern அதிகபட்சமாக 3,426 தாக்கங்களைப் பதிவு செய்தது. அதனைத் தொடர்ந்து Graubünden 2,773, Ticino 2,552, Valais 2,276 மற்றும் Vaud 2,188 மின்னல் தாக்கங்களைப் பதிவு செய்துள்ளன.

மொத்த மின்னல் எண்ணிக்கையில் இத்தாலி ஐரோப்பாவில் முதலிடம் பெற்றது. அதற்கு அடுத்த இடங்களில் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் இடம்பெற்றன. ஆனால் நிலப்பரப்பின் அளவுடன் ஒப்பிடப்படும் மின்னல் அடர்த்தியில், ஒரு சதுர கிலோமீற்றருக்கு 4.73 நிலத் தாக்கப் புள்ளிகளுடன் இத்தாலி முதலிடத்திலும், 2.43 புள்ளிகளுடன் Switzerland இரண்டாவது இடத்திலும் உள்ளது. நெதர்லாந்து 2.39, பெல்ஜியம் 2.20, பிரான்ஸ் 2.09 மற்றும் ஜேர்மனி 1.30 என்ற விகிதங்களைப் பதிவு செய்துள்ளன.

2026 கோடைக்காலத்தில் ஐரோப்பா முழுவதும் 893,458 மின்னல் தாக்கங்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக ஜூன் மாதத்தின் இரண்டாம் பாதியில் ஏற்பட்ட கடுமையான வெப்ப அலையின்போதும் ஆகஸ்ட் மாதத்திலும் மின்னல் செயல்பாடு அதிகமாகக் காணப்பட்டது. 2025 கோடைக்காலத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு ஐரோப்பாவில் மின்னல் செயல்பாடு கணிசமாக அதிகரித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னலுடன் கூடிய புயல்கள் விமானப் பயணத் தாமதங்கள், பொதுப் போக்குவரத்துத் தடைகள், மின்சாரப் பாதிப்புகள் மற்றும் மரங்கள் அல்லது பொருட்கள் விழுவதால் ஏற்படும் காயங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆபத்துகளை உருவாக்கக்கூடும். இதனால் இடியுடன் கூடிய மழை எச்சரிக்கை விடுக்கப்படும் நேரங்களில் பொதுமக்கள் திறந்த வெளிகள், உயரமான மரங்கள் மற்றும் நீர்நிலைகளிலிருந்து விலகிப் பாதுகாப்பான கட்டடங்களுக்குள் இருப்பது அவசியமாகும்.




# Untersiggenthal தேவாலயத்தில் செல்லப்பிராணிகளுக்கு ஆசீர்வாதம்

## பாம்புக்கும் புனித நீர்!

Aargau மாநிலத்தின் Untersiggenthal பகுதியில் நடைபெற்ற அறுவடை நன்றி ஆராதனையைத் தொடர்ந்து, பல்வேறு வகையான செல்லப்பிராணிகளுக்கு ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. Siggenthal மேய்ப்புப்பணிப் பிரிவினால் இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்கு விலங்கு உரிமையாளர்களிடமிருந்து பெரும் வரவேற்பு கிடைத்தது.

மேய்ப்புப்பணியாளரும் Pastoralraum Siggenthal நிர்வாகியுமான Lara Tedesco, கடந்த ஆண்டு இந்த நிகழ்வை முதன்முறையாக ஆரம்பித்திருந்தார். அதற்குக் கிடைத்த நல்ல வரவேற்பைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் விலங்கு ஆசீர்வாதத்தை நடத்தத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

நாய்கள் மட்டுமின்றி, கினிப் பன்றிகள், ஆமைகள் மற்றும் Bo எனப் பெயரிடப்பட்ட Baird's வகையைச் சேர்ந்த ஏறும் பாம்பும் நிகழ்வுக்கு அழைத்து வரப்பட்டிருந்தன. அனைத்து உயிரினங்களையும் சமமாகக் கருதும் அடிப்படையில், அந்தப் பாம்பின் மீதும் புனித நீர் தெளிக்கப்பட்டு ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. வயதான Emiro என்ற Pudel நாயும் ஆசீர்வாதத்தைப் பெற்ற செல்லப்பிராணிகளில் ஒன்றாகும்.

விலங்குகளை ஆசீர்வதிப்பது புதிய நடைமுறை அல்ல. இது பழமையான கிறிஸ்தவ மரபுகளில் ஒன்றாகும். கடந்த காலங்களில் விவசாயத்திற்குத் தேவையான கால்நடைகள், குதிரைகள் மற்றும் தேனீக்கள் போன்றவற்றுக்கே பெரும்பாலும் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இன்று செல்லப்பிராணிகள் குடும்ப உறுப்பினர்களாகக் கருதப்படுவதால், வீட்டில் வளர்க்கப்படும் அனைத்து வகையான விலங்குகளும் இதில் இணைக்கப்படுகின்றன.

விலங்குகளுக்கு ஆசீர்வாதமும் பாதுகாப்பும் வேண்டுவது மட்டுமல்லாமல், அவற்றை அன்புடனும் பொறுப்புடனும் பராமரிக்க வேண்டிய கடமை மனிதர்களுக்கு இருப்பதை நினைவூட்டுவதும் இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். மனிதர்கள் இயற்கை மற்றும் அனைத்து உயிரினங்களுடன் கொண்டுள்ள உறவு குறித்து கிறிஸ்தவ சமூகத்தில் உருவாகிவரும் மாற்றத்தையும் இந்நிகழ்வு பிரதிபலிக்கிறது.

விலங்கு உரிமையாளர்களிடையே கிடைத்த அதிக வரவேற்பைத் தொடர்ந்து, இந்த ஆசீர்வாத நிகழ்ச்சியை அடுத்த ஆண்டும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக Lara Tedesco தெரிவித்துள்ளார்.

# Swiss இராணுவத்தின் புதிய கைத்துப்பாக்கி உற்பத்தியை Switzerland-க்கு கொண்டுவரத் தயாராகும் SIG Sauer



Swiss இராணுவத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள SIG Sauer P320 கைத்துப்பாக்கியின் முழுமையான உற்பத்தியை Switzerland-இல் மேற்கொள்ள SIG Sauer நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 2026 ஆயுதக் கொள்முதல் திட்டத்திற்கு மாநிலங்களவையைத் தொடர்ந்து தேசிய சபையும் ஒப்புதல் வழங்கினால், Neuhausen am Rheinfall பகுதியில் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்படும்.

Swiss இராணுவம் அடுத்த பத்தாண்டுகளுக்குள் மொத்தம் 140,000 P320 கைத்துப்பாக்கிகளை கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக 50 மில்லியன் Swiss Francs செலவில் 50,000 கைத்துப்பாக்கிகளை வாங்குவதற்கான முன்மொழிவு 2026 ஆயுதத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. மாநிலங்களவை இதற்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில், தேசிய சபை செப்டம்பர் 15 செவ்வாய்க்கிழமை முடிவெடுக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தின் இறுதி அங்கீகாரம் கிடைத்தால், P320 கைத்துப்பாக்கியின் உதிரிப்பாகப் பரிசோதனை, கைகளால் ஒன்றுசேர்த்தல், தரக்கட்டுப்பாடு மற்றும் இறுதிச் சோதனைகள் உள்ளிட்ட முழுமையான உற்பத்திச் செயல்முறையை Switzerland-இல் அமைக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. புதிய உற்பத்திப் பிரிவு Swiss இராணுவத்தின் தேவையை மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் ஐரோப்பிய மற்றும் பிற சர்வதேச சந்தைகளுக்கும் விநியோகிக்கக்கூடிய வகையில் விரிவாக்கப்படவுள்ளது.

SIG Sauer Switzerland நிறுவனத்தில் தற்போது




சுமார் 50 பணியாளர்கள் பணிபுரிவதுடன், ஏறக்குறைய 400 விநியோக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. உற்பத்தி விரிவாக்கப்பட்டால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகுவதுடன், பாதுகாப்புத் துறைக்கான உள்நாட்டு விநியோகச் சங்கிலியும் வலுப்பெறலாம். Switzerland-இல் உற்பத்தி இடம்பெறுவது, சர்வதேச ஆயுதச் சந்தையில் நாட்டின் பேச்சுவார்த்தை நிலையையும் மூலோபாயச் சுயாதீனத்தையும் மேம்படுத்தக்கூடும் என்பது நிறுவனத்தின் கருத்தாகும்.

நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி Pasquale Caputi, Swiss இராணுவம் விரும்பினால் Neuhausen பகுதியில் சிறிய அளவிலான தோட்டாக்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் எதிர்காலத்தில் அமைக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் இது தற்போது உறுதிப்படுத்தப்பட்ட திட்டமல்ல; இராணுவத்தின் தேவை மற்றும் அரசியல் முடிவுகளைச் சார்ந்த ஒரு சாத்தியக்கூறு மட்டுமே.

P320 என்பது இராணுவம் மற்றும் பொலிஸ் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட, மாற்றியமைக்கக்கூடிய கட்டமைப்பைக் கொண்ட 9 மில்லிமீற்றர் அரைத் தானியங்கி கைத்துப்பாக்கியாகும். தற்போது பயன்பாட்டிலுள்ள Pistole 75 P220-க்கு மாற்றாக இது தெரிவு செய்யப்பட்டுள்ளது. புதிய கைத்துப்பாக்கி 2028 முதல் Swiss இராணுவத்தில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்காவில் P320 தொடர்பாகத் தற்செயலான வெடிப்பு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து Armasuisse மேற்கொண்ட சோதனைகளில், கட்டுப்பாடற்ற துப்பாக்கிச் சூடு ஏற்பட்டதற்கான ஆதாரம் கண்டறியப்படவில்லை என Swiss ஆயுதக் கொள்முதல் பிரிவு தெரிவித்துள்ளது. பணிச்சூழலுக்கு ஏற்றவாறு கைத்துப்பாக்கியின் பிடிப்புப் பகுதிகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.




சுவிட்சர்லாந்தில் வீடுகளில் ஒருவர் சராசரியாக ஆண்டுக்கு சுமார் 80 கிலோ உணவை வீணாக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் கொள்வனவு மதிப்பு ஒருவருக்கு ஆண்டுக்கு சுமார் 600 சுவிஸ் பிராங்குகள் (CHF) என மதிப்பிடப்பட்டுள்ளது

உணவை வீணாக்காமல் இருப்பது பணத்தைச் சேமிப்பது மட்டுமல்ல; உணவு, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை மதிப்பதுமாகும்

சுவிட்சர்லாந்தில் உணவு வீணாக்கத்தைக் குறைப்பதற்கான பெரிய தேசிய விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. 2026 செப்டம்பர் 12 முதல் 20 வரை, "Mach mehr draus!" என்ற கருப்பொருளில் Food Waste-க்கு எதிரான தேசிய நடவடிக்கை வாரம் நடைபெறுகிறது.

சுவிட்சர்லாந்திலுள்ள குடும்பங்கள் ஒரே ஒரு வாரத்திற்கு எந்த உணவையும் வீணாக்காமல் இருந்தால், சுமார் 30 மில்லியன் உணவுகளுக்குச் சமமான அளவை காப்பாற்ற முடியும் என இந்த முயற்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் விவசாயம் தொடங்கி உணவு உற்பத்தி, விற்பனை மற்றும் தனியார் குடும்பங்கள் வரை முழு உணவுச் சங்கிலியிலும் ஆண்டுக்கு சுமார் 2.8 மில்லியன் டன் உணவுப் பொருட்கள் இழக்கப்படுகின்றன அல்லது வீணாக்கப்படுகின்றன.

குறிப்பாக வீடுகளில் ஒருவர் சராசரியாக ஆண்டுக்கு சுமார் 80 கிலோ உணவை வீணாக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் கொள்வனவு மதிப்பு ஒருவருக்கு ஆண்டுக்கு சுமார் 600 சுவிஸ் பிராங்குகள் (CHF) என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நடவடிக்கை வாரத்தை முன்னிட்டு 50-க்கும் மேற்பட்ட அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பங்கேற்கின்றன.

Foodsave விருந்துகள், சமையல் பயிற்சிகள், கண்காட்சிகள் மற்றும் பொதுமக்கள் நேரடியாகப் பங்கேற்கக்கூடிய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

Aargau முதல் Zug வரை பல Kantone-கள், Aldi முதல் Volg வரையிலான சில்லறை விற்பனை நிறுவனங்கள் மற்றும் GastroSuisse, HotellerieSuisse போன்ற துறைசார் அமைப்புகளும் இதில் பங்கேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான அளவு மட்டுமே உணவுப் பொருட்களை வாங்குவது, காலாவதி தேதிகளை கவனிப்பது, மீதமான உணவை மீண்டும் பயன்படுத்துவது மற்றும் உணவை சரியான முறையில் சேமிப்பது போன்ற சிறிய மாற்றங்களே பெரிய அளவிலான Food Waste-ஐ குறைக்க உதவும்.


SAVE THE DATE
வெள்ளிவீதி
இலக்கியக் கூடுகை 2
அமர்வு 1
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
காயத்ரி ஆர்.
அமர்வு 2
எழுத்தாளர்
தில்லை
அமர்வு 3
எழுத்தாளர்
தர்மினி
அமர்வு 4
எழுத்தாளர்
நவமகன்
அமர்வு 5
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
பிரசாந்தி சேகரம்
அமர்வு 6
எழுத்தாளர் - அரங்கக் கலைஞர்
லிவிங் ஸ்மைல் வித்யா
01.11.2026
SUNDAY
ZÜRICH, SWITZERLAND
சயந்தன் /
+4179 519




## Zuerich Knabenschiessen 2026:

# 15 வயது Julian Zehnder புதிய Schützenkönig

Zürich நகரின் பாரம்பரிய Knabenschiessen துப்பாக்கிச் சுடும் போட்டியில், Turbenthal பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய Julian Zehnder 2026ஆம் ஆண்டின் Schützenkönig பட்டத்தை வென்றுள்ளார்.

போட்டியின் முதல் நாளான சனிக்கிழமை அவர் அதிகபட்சமாகப் பெறக்கூடிய 35 புள்ளிகளையும் பெற்றிருந்தார். திங்கட்கிழமை காலைவரை 3,400-க்கும் அதிகமான இளைஞர்கள் போட்டியில் பங்கேற்றபோதிலும், வேறு எவராலும் 35 புள்ளிகளைப் பெற முடியவில்லை.

இதனால் Julian Zehnder நேரடியாக வெற்றியாளராக அறிவிக்க ப்பட்டார். அவர் மட்டுமே முழுமையான 35 புள்ளிகளைப் பெற்றவர் என்பதை Knabenschiessen ஏற்பாட்டாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

Schützenverein Wiesental துப்பாக்கிச் சுடும் கழகத்தின் உறுப்பினரான Julian, துப்பாக்கிச் சுடுவது மனதை அமைதிப்படுத்த உதவுவதாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

வெற்றிக்காக அவருக்கு CHF 5,000 பரிசுத் தொகை, Zunft zum Weggen அமைப்பின் பாரம்பரிய "Kettelithaler" மற்றும் நினைவுப் பரிசாக ஒரு தகரக் குடுவையும் வழங்கப்பட்டன. பரிசுத் தொகையில் Gaming PC ஒன்றை வாங்கவுள்ளதாகவும், மீதிப் பணத்தை எதிர்கால வாகன ஓட்டுநர் உரிமத்திற்காகச் சேமிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளாக துப்பாக்கிச் சுடும் கழகத்தில் பயிற்சி பெற்றுவரும் 16 வயதுடைய Melina Schiele, 34 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றார். இம்முறை 16 இளைஞர்கள் இறுதிச் சுற்றில் பங்கேற்றனர்.

1991ஆம் ஆண்டு முதல் பெண்களும் Knabenschiessen போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றனர். இன்று Zürich நகரம் மற்றும் கன்டனைச் சேர்ந்த ஆண், பெண் இளைஞர்கள் ஒரே போட்டியில் Schützenkönig அல்லது Schützenkönigin பட்டத்திற்காகப் போட்டியிடுகின்றனர்.

இறுதிச் சுற்றில் Zürich நகரசபை உறுப்பினர் Michael Baumer மற்றும் Zürich கன்டன் அரசாங்க உறுப்பினர் Mario Fehr உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

# CHF 200,000 மரபுரிமையாகக் கிடைத்தாலும்
# சொந்த வீடு வாங்க முடியாத நிலை!




Switzerland-இல் சொந்த வீடு வாங்கும் கனவு, நடுத்தர வருமானம் கொண்ட பல குடும்பங்களுக்கு மேலும் எட்டாததாகி வருகிறது. குடும்பத்தினரிடமிருந்து CHF 100,000 அல்லது CHF 200,000 வரை மரபுரிமையோ முன்கூட்டிய சொத்துப் பங்கோ கிடைத்தாலும், வங்கிகளின் நிதித் தகுதி நிபந்தனைகளை நிறைவேற்றுவது பலருக்குச் சிரமமாக உள்ளது.

இதற்கு வீட்டின் ஆரம்ப விலை மட்டுமே காரணமல்ல. வீடு வாங்குபவரிடம் போதுமான சொந்த முதலீடு இருக்க வேண்டும் என்பதுடன், அடமானக் கடனை நீண்டகாலத்திலும் செலுத்தக்கூடிய வருமானம் உள்ளதா என்பதையும் வங்கிகள் பரிசோதிக்கின்றன.

உதாரணமாக, CHF 1.2 மில்லியன் பெறுமதியான வீட்டிற்கு 20 சதவீத சொந்த முதலீடு தேவைப்பட்டால், வாங்குபவர் CHF 240,000 ஏற்பாடு செய்ய வேண்டும். CHF 200,000 மரபுரிமையாகக் கிடைத்தாலும் மேலும் CHF 40,000 தேவைப்படும். ஆனால் இந்தத் தொகையைச் செலுத்துவது மட்டும் வீட்டுக் கடன் கிடைப்பதற்கு உத்தரவாதமல்ல.

வங்கிகள் தற்போதைய குறைந்த அடமான வட்டியை மட்டும் கணக்கிடுவதில்லை. எதிர்காலத்தில் வட்டி உயர்ந்தாலும் குடும்பத்தால் செலவுகளைச் சமாளிக்க முடியுமா என்பதை அறிய, பொதுவாக 5 சதவீதக் கணக்கீட்டு வட்டி, கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகளையும் சேர்த்துப் பார்க்கின்றன.

FINMA வழிகாட்டுதலின்படி, இத்தகைய மொத்தக் கணக்கீட்டுச் செலவுகள் வருமானத்தின் குறிப்பிட்ட அளவைத் தாண்டாமல் இருக்க வேண்டும்.



இதனால் சொந்த முதலீடு இருந்தாலும், குடும்பத்தின் ஆண்டு வருமானம் போதுமானதாக இல்லாவிட்டால் வங்கி அடமானக் கடனை மறுக்கலாம். குறிப்பாக Zürich, Geneva, Lausanne, Zug மற்றும் Basel போன்ற விலையுயர்ந்த பகுதிகளில் இந்தத் தகுதித் தடையைத் தாண்டுவது மிகவும் கடினமாகியுள்ளது.

Raiffeisen வெளியிட்ட 3 செப்டம்பர் 2026 ஆய்வின்படி, வீட்டுச் சந்தையில் பற்றாக்குறையும் குறைந்த வட்டியும் தொடர்ந்தாலும், அதிகமான ஆரம்பத் தடைகளால் வீடு வாங்கும் நடவடிக்கைகளும் விலை உயர்வின் வேகமும் படிப்படியாகக் குறைகின்றன. இருப்பினும், வீட்டு விலைகள் உடனடியாக வீழ்ச்சியடையும் என்பதற்கான தெளிவான அறிகுறி இல்லை.

குடியேற்றத்தால் தொடரும் தேவை, குறைவான புதிய கட்டுமானங்கள் மற்றும் முதலீட்டாளர்களின் ஆர்வம் ஆகியவை விலைகளை ஆதரிக்கின்றன. Swiss National Bank தகவலின்படி, கடந்த 25 ஆண்டுகளில் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடங்களின் சந்தை மதிப்பு மூன்று மடங்காகியுள்ளது. 2025 இறுதியில் அதன் மொத்த மதிப்பு CHF 2.924 டிரில்லியனாக இருந்தது.

எனவே CHF 200,000 மரபுரிமையாகக் கிடைத்தால் வீடு வாங்கவே முடியாது என்பது இந்தச் செய்தியின் பொருள் அல்ல. வீட்டின் விலை, குடும்ப வருமானம், ஏற்கெனவே உள்ள சேமிப்பு, வாங்கும் பகுதி மற்றும் வங்கியின் மதிப்பீடு ஆகியவற்றைப் பொறுத்தே முடிவு அமையும். ஆனால் மரபுரிமை கிடைத்த பல குடும்பங்களுக்குக்கூட சொந்த வீடு வாங்குவது இப்போது உறுதியான வாய்ப்பாக இல்லை என்பதே ஆய்வின் முக்கிய செய்தியாகும்.

# தெரிந்துகொள்ளுங்கள்:




# தெருவில் கிடைத்த பணத்தை வைத்துக்கொள்ளலாமா?

**“தரையில் CHF 20 கிடைத்தது… யாரும் பார்க்கவில்லை! அதை எடுத்துக்கொள்வது சட்டப்படி சரியா?”**

Switzerland-ல் தெரு, பூங்கா அல்லது வேறு பொது இடத்தில் பணம், Mobile Phone, Wallet, Jewellery போன்ற பொருள் கிடைத்தால், அது கண்டுபிடித்தவருக்கு உடனடியாகச் சொந்தமாகிவிடாது.

Swiss சிவில் சட்டம் Art. 720 ZGB படி, உரிமையாளர் யார் என்று தெரிந்தால் அவருக்குத் தகவல் தெரிவித்து பொருளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

உரிமையாளர் தெரியாவிட்டால், பொருள் கிடைத்ததை Police அல்லது சம்பந்தப்பட்ட Fundbüro–காணாமற்போன பொருட்கள் அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

பொருளின் மதிப்பு வெளிப்படையாக CHF 10-ஐத் தாண்டினால், Police-க்கு அறிவிப்பது சட்டபூர்வக் கடமை.

CHF 10 அல்லது அதற்குக் குறைவான பொருளாக இருந்தாலும் உரிமையாளர் தெரிந்தால் திருப்பிக் கொடுக்க வேண்டிய அடிப்படைக் கடமை நீங்காது.

ரயில், Bus அல்லது Tram-ல் பொருள் கிடைத்தால் அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல் உடனடியாக போக்குவரத்து நிறுவனத்தின் பணியாளர் அல்லது Lost and Found நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

Hotel, Restaurant, Shopping Centre, Cinema அல்லது வேறொருவரின் வீட்டில் கிடைத்தால், அந்த இடத்தின் பொறுப்பாளர், உரிமையாளர் அல்லது



வாடகையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

நேர்மையாகத் திருப்பிக் கொடுக்கும் நபருக்கு என்ன கிடைக்கும்?

உரிமையாளரிடம் பொருள் திரும்பு ம்போது, கண்டுபிடித்தவருக்கு ஏற்பட்ட நியாயமான செலவுகளைப் பெறவும் பொருத்தமான Finderlohn–கண்டு பிடிப்பா ளர் வெகுமதி கோரவும் சட்டத்தில் உரிமை உள்ளது.

பொதுவாக பொருளின் மதிப்பில் சுமார் 10% வழிகாட்டுதலாகக் கருதப்படுகிறது. ஆனால் இது கட்டா யமான நிலையான தொகை அல்ல; பொருளின் மதிப்பு மற்றும் சூழ்நிலை யைப் பொறுத்து மாறலாம்.

கண்டுபிடித்ததை முறையாக அறி வித்து அனைத்துச் சட்டக் கடமை களையும் நிறைவேற்றிய பின்னரும், ஐந்து ஆண்டுகளுக்குள் உரிமையாளர் கண்டறியப்படாவிட்டால், சில சூழ்நி லைகளில் அந்தப் பொருளின் உரிமை கண்டுபிடித்தவருக்குச் செல்ல லாம்.

ஆனால் உரிமையாளரைத் தேடாமல் விலையுயர்ந்த பொருளை வேண்டு மென்றே வைத்துக்கொண்டால், அது சட்டவிரோதமான சொத்தாக்கம்–un-rechtmässige Aneignung எனக் கருதப்படலாம். Art. 137 StGB படி அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டனை ஏற்படலாம்.

Switzerland-ல் CHF 10-ஐத் தாண்டும் கண்டெடுக்கப்பட்ட பொருளை Po-lice-க்கு அறிவிக்க வேண்டும் என்பது உங்களுக்கு முன்பே தெரிந்திருந்ததா? நண்பர்களு டனும் பகிருங்கள்!




# Switzerland ரயில் நிலையங்களில் காணப்படும் புகழ்பெற்ற கடிகாரத்தைக் கவனமாகப் பார்த்திருக்கிறீர்களா?

அதன் சிவப்பு விநாடிமுள் ஒரு முழுச் சுற்றை முடித்ததும், 12 மணியைக் காட்டும் இடத்தில் சிறிது நேரம் நின்றுவிடும். பின்னர் நிமிடமுள் நகர்ந்ததும் மீண்டும் பயணத்தைத் தொடங்கும்.

இது கடிகாரத்தில் ஏற்பட்ட கோளாறு அல்ல. அனைத்து ரயில் நிலையக் கடிகாரங்களையும் ஒரே நேரத்தில் இயங்கவைக்கும் புத்திசாலித்தனமான பழைய தொழில்நுட்பம்! சாதாரணக் கடிகாரத்தில் விநாடிமுள் ஒரு சுற்றை முடிக்க 60 விநாடிகள் எடுக்கும். Swiss ரயில் நிலையக் கடிகாரத்தின் சிவப்பு முள் சுமார் 58.5 விநாடிகளில் சுற்றை முடித்துவிடும்.

பின்னர் அது மேலே நின்று, மையக் கட்டு ப்பாட்டுக் கடிகாரத்திலிருந்து வரும் மின்சாரச் சிக்னலுக்காகக் காத்திருக்கும். சரியாக அடுத்த நிமிடம் தொடங்கும்போது, நிமிடமுள் முன்னேறி சிவப்பு முள் மீண்டும் சுழலத் தொடங்கும்.

இதனால் ஒரு நிலையத்திலுள்ள கடிகாரங்கள் அனைத்தும் ஒரே நேரத்தைக் காட்ட முடிந்தது. இந்தக் கடிகாரத்தை SBB பொறியாளரான Hans Hilfiker, 1944ஆம் ஆண்டு வடிவமைத்தார். எண்கள் இல்லாத வெள்ளை முகப்பு, தடிப்பான கறுப்பு நேரக் குறியீடுகள் மற்றும் தொலைவிலிருந்தும் வாசிக்கக்கூடிய எளிய வடிவமைப்பு இதன் சிறப்பாகும்.

1953ஆம் ஆண்டு, ரயிலை அனுப்புவதற்கு நிலைய அதிகாரிகள் பயன்படுத்திய சிவப்பு Signal Baton-ஐ நினைவூட்டும் வட்ட வடிவ சிவப்பு விநாடிமுள் சேர்க்கப்பட்டது.

இன்றைய தொழில்நுட்பத்தில் விநாடி அளவிலேயே எல்லாக் கடிகாரங்களையும் ஒத்திசைக்க முடியும். இருந்தாலும் இந்தச் சிறிய இடைநிறுத்தம் Swiss ரயில்வே அடையாளத்தின் ஒரு பகுதியாகத் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது.

இந்த வடிவமைப்பு London Design Museum மற்றும் New York Museum of Modern Art போன்ற உலகப் புகழ்பெற்ற அரு ங்காட்சியகங்களிலும் இட ம்பிடித்துள்ளது.

Swiss ரயில் நிலையக் கடிகாரத்தின் விநாடிமுள் வேண்டுமென்றே சிறிது நேரம் நிறுத்தப்படுகிறது என்பது உங்களுக்கு முன்பே தெரிந்திருந்ததா? அடுத்தமுறை நிலையத்திற்குச் செல்லும்போது கவனி த்துப் பாருங்கள்!




# சூரிச் மக்களின் இந்த 8 விசித்திரமான மரபுகள் உங்களுக்குத் தெரியுமா?

சூரிச் என்றால் வங்கிகள், Bahnhofstrasse, ஏரி மட்டுமல்ல. பல நூற்றாண்டுகளாகத் தொடரும் சில வித்தியாசமான விழாக்களும் மரபுகளும் சூரிச் நகரத்தின் தனித்துவமான அடையாளங்களாக இருக்கின்றன.

1. Knabenschiessen – இளைஞர்களுக்கான துப்பாக்கிச் சுடுதல் போட்டி இதன் முக்கிய அம்சம். 1991 முதல் பெண்களும் போட்டியில் பங்கேற்கின்றனர். 12-14 செப்டம்பர் 2026 இம்முறை விழா நடைபெறுகிறது.

2. Schulsilvester – கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு முந்தைய கடைசி பள்ளி நாளில் மாணவர்கள் அதிகாலையில் சத்தமிட்டு கொண்டாடிய பழைய வழக்கம். சேதங்கள் ஏற்பட்டதால் 2004 முதல் இது கட்டுப்படுத்தப்பட்ட பள்ளி நிகழ்வான Schulausklang வடிவத்திற்கு மாற்றப்பட்டது.

3. Zwänzgerle – Easter Monday அன்று Limmatquai பகுதியில் குழந்தைகளின் Easter முட்டைகளை நோக்கி பெரியவர்கள் 20-Rappen நாணயங்களை வீசுவார்கள். நாணயம் முட்டையில் பதிந்தால் முட்டை பெரியவருக்கு; தவறினால் நாணயமும் முட்டையும் குழந்தைக்கே!

4. 1. Mai Nachdemo – மே 1 தொழிலாளர் தினத்தின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் Zürich நகரில் நடைபெற்று வந்த அனுமதியற்ற இரவு ஆர்ப்பாட்டமும் நவீன நகர மரபுகளில் ஒன்றாக கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.



5. Schifferstechen – மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை Limmat ஆற்றில் படகுகளில் நின்றபடி நீண்ட கம்புகளால் எதிரணியினரை தண்ணீருக்குள் தள்ள முயலும் வரலாற்றுச் சவால். இந்த மரபுக்கான பதிவு 1576ஆம் ஆண்டின் நகர வரைபடத்திலேயே காணப்படுகிறது. அடுத்த நிகழ்வு 10 ஜூலை 2027.

6. Semmeliwerfen – Sechseläuten திங்கட்கிழமை காலை 11 மணிக்கு Grossmünster கோபுரங்களிலிருந்து பேக்கரி தொழிலாளர்கள் சிறிய ரொட்டிகளை கீழே வீசும் மரபு. இது Charlemagne (Karl der Grosse) தொடர்பான பாரம்பரியக் கதையுடன் இணைக்கப்படுகிறது.

7. Hirsebreifahrt – 1456ஆம் ஆண்டில் Zürich-Strasbourg இடையிலான ஒரு சவாலுடன் தொடர்புடைய வரலாற்றுப் படகுப் பயணம். Zürich-லிருந்து எடுத்துச் சென்ற சூடான தினைக் கஞ்சி சுமார் 22 மணிநேரப் பயணத்திற்குப் பின்னரும் சூடாக இருந்தது என்பதே இந்த மரபின் புகழ்பெற்ற கதை. இது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நினைவு கூரப்படுகிறது.

8. Züri Fäscht – பாரம்பரியமாக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடை பெற்ற மிகப்பெரிய நகர விழா. கடந்த காலங்களில் 2.5 மில்லியன் வரையான பார்வையாளர்களை ஈர்த்ததாகக் கூறப்படுகிறது. 2023இல் விழாவுக்கு இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதை மீண்டும் நடத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



# மாகாண சபைத் தேர்தலுக்காக நான் ஏன் தொடர்ந்தும் குரல் கொடுக்கின்றேன்?



ராஜ் சிவநாதன் - மெல்பேர்ன், அவுஸ்திரேலியா



எனது கட்டுரைகள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தொடர்ச்சியான பிரசாரத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றன என்று பலர் கூறுகின்றனர். அதனை நான் மறுப்பதில்லை. ஆம், அது உண்மைதான். எனது எழுத்துகளும், கருத்துகளும், பொது தலையீடுகளும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற ஜனநாயக கோரிக்கையின் ஒரு பகுதியாகவே உள்ளன.

இதற்காக நான் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மாகாண சபைத் தேர்தல் என்பது எந்த ஒரு கட்சிக்கோ, வேட்பாளருக்கோ, தனிநபருக்கோ சொந்தமான விடயம் அல்ல. அது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தங்களது மாகாண நிர்வாகத்தைத் தெரிவுசெய்யும் உரிமை பல ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகின்றது.

மாகாண சபைகளையும் 13ஆவது திருத்தத்தையும் எதிர்க்கும் தமிழர்களின் கருத்துரிமையை நான் மதிக்கிறேன்.




அவர்களுக்கு வேறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் இருக்கலாம். அவர்கள் கூட்டாட்சி, சுயாட்சி அல்லது வேறு அரசியல் தீர்வுகளை விரும்பலாம். அதனை விவாதிப்பதற்கு அவர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்கள், அதே தேர்தலை நடத்துவதற்காக வெளிப்படையாக குரல் கொடுக்காமல் மௌனமாக இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இன்று சில அரசியல்வாதிகள் எதிர்கால வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தேர்தல்களை நடத்த அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுப்பதில் அவர்கள் முன்வருவதில்லை. தேர்தல் நடந்தால் அதன் பலனைப் பெற விரும்புகிறார்கள்; ஆனால் அந்தத் தேர்தலைப் பெறுவதற்கான ஜனநாயகப் போராட்டத்தில் தெளிவாக நிற்கத் தயங்குகிறார்கள். இதுவே எனது முக்கியமான விமர்சனம்.

தமிழ்த் தேசிய அரசியலில் முக்கிய பங்கு வகித்த ITAK கட்சி, இன்று மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்திய அடிமட்ட அரசியல் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. ஆனால் கட்சியின் பல தலைவர்களிடமும் அந்த அவசர உணர்வு தெளிவாகத் தெரியவில்லை. குறிப்பாக, C.V.K. சிவஞானம் அவர்கள் இந்த விடயத்தில் தமது நிலைப்பாட்டையும், நடைமுறை நடவடிக்கைகளையும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். முன்னாள் சபைத் தலைவர் என்ற வகையில் அவருக்கு அனுபவமும் பொறுப்பும் உள்ளது. அந்த அனுபவம் இன்று ஜனநாயக உரிமைக்கான பிரசாரத்தில் பயன்பட வேண்டும்.

அதேபோல், S. சிறீதரன் அவர்களும் மாகாண சபைகளின் பயன்கள், 13ஆவது திருத்தத்தின் வரம்புகள் மற்றும் அதன் வாய்ப்புகள் குறித்து மக்களிடம் தொடர்ந்து பேச வேண்டியவர். ஆனால் கட்சித் தலைமை, நாடாளுமன்ற பிரதிநிதித்துவம், எதிர்கால முதலமைச்சர் வேட்பாளர் விவாதம் போன்ற உட்கட்சி அரசியல் விடயங்களே அதிகமாக முன்னிலைப்படுகின்றன. இதனால் மக்கள் மத்தியில் குழப்பம்

உருவாகியுள்ளது. தமிழ்த் தேசிய அரசியல் இன்று கொள்கையைக் காட்டிலும் பதவி போட்டியால் வழிநடத்தப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ITAK கட்சிக்குள் பல்வேறு அணிகள் இருப்பதாக மக்களிடம் ஒரு எண்ணம் உருவாகியுள்ளது. அவை உத்தி யோகபூர்வமான குழுக்களா இல்லையா என்பது வேறு கேள்வி. ஆனால் மக்களின் பார்வையில் கட்சி பல தனிநபர் மைய அணிகளாகப் பிரிந்திருப்பது போலத் தெரிகிறது. இந்த தோற்றமே கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. உட்கட்சிப் போட்டிகள், தகவல் கசிவுகள், தனிப்பட்ட பகைமைகள் மற்றும் பதவி விருப்பங்கள் தமிழ்த் தேசிய அரசியலின் நம்பகத்தன்மையை பலவீன ப்படுத்துகின்றன.

முன்னர் TNA கூட்டமைப்பின் கீழ் ITAK வடக்கு மற்றும் கிழக்கில் வலுவான தேர்தல் ஆதரவைப் பெற்றது. ஆனால் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் அதே நிலை தொடரும் என்று யாரும் உறுதியாகக் கூற முடியாது. கட்சியின் தற்போதைய உட்கட்டமைப்பு, தலைமைத் தெளிவின்மை மற்றும் பொதுக் கொள்கை அடிப்படையிலான பிரசாரத்தின் குறைபாடு காரணமாக அது கணிசமான வாக்குகளை இழக்கக்கூடும்.

ITAK எதிர்ப்பு மனப்பான்மையைக் கொண்டவர்கள் அல்லது கட்சியில் இருந்து விலகியவர்கள், TNPF அல்லது பிற அமைப்புகளுடன் இணைந்து போட்டியிடலாம். அது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆனால் மாகாண சபை முறைமையை வலுப்படுத்தும் நோக்கத்திற்குப் பதிலாக ITAK-ஐ பலவீனப்படுத்தும் நோக்கத்தில் மட்டும் தேர்தலில் களமிறங்கினால், அதன் இறுதி விளைவு தமிழ் மக்களின் அரசியல் பலவீனமாகவே அமையும்.

இராமநாதன் அர்ச்சுனா போன்ற புதிய அரசியல் குரல்களும் மாகாண சபை அரசியலின் வழியாக தமது பாதையை அமைக்க முயல்கின்றனர். அவர் சாத்தியமான போட்டியாளர்களின் குறைகளை சுட்டிக்காட்டுகிறார். ஆனால் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாடாளுமன்றத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் தொடர்ந்து முன்னெடுப்பது அவசியம். விமர்சனம் மட்டும் போதாது; ஜனநாயக உரிமைக்கான செயல்பாடும் வேண்டும்.

TELO, EPRLF, PLOTE, EPDP, TNPF, TULF, NPP மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து அரசியல் அமைப்புகளும் இந்த விடயத்தில் தமது தெளிவான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். யார் போட்டியிடுகிறார்கள் என்பது இரண்டாம் நிலை கேள்வி. முதலில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் அவர்கள் ஒருங்கிணைந்த அழுத்தத்தை உருவாக்குகிறார்களா என்பதே முக்கியம்.

NPP அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தல் குறித்து தெளிவான கால அட்டவணையோ,




அரசியல் உறுதியோ இதுவரை வழங்கப்படவில்லை. தேர்தல் ஆணைக்குழு நடைமுறை வழிகளை முன்வைத்துள்ளது. சட்ட ரீதியான வாய்ப்புகளும் இருக்கின்றன. இருந்தும் தாமதம் தொடர்கிறது. இது ஜனநாயகத்திற்கு நல்ல அறிகுறி அல்ல.

இந்த சூழலில் தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சித் தன்மையைத் தாண்டி, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஒருங்கிணைந்த ஜனநாயக அழுத்தத்தை உருவாக்க வேண்டும். NPP தலைமையுடன் மட்டும் அல்லாமல், தென்னிலங்கை அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், தொழில்சார் அமைப்புகள், மதத் தலைவர்கள் மற்றும் சர்வதேச சமூகத்துடனும் இந்த விடயம் குறித்து தொடர்ச்சியான உரையாடலை முன்னெடுக்க வேண்டும்.

இன்று பலரது பெயர்கள் எதிர்கால முதலமைச்சர் வேட்பாளர்களாக முன்வைக்கப்படுகின்றன. முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி M. இளஞ்செழியன் அவர்களின் பெயரும் அடிக்கடி பேசப்படுகிறது. அவருக்கு அரசியலுக்கு வருவதற்கான நோக்கம் இல்லையெனில், அவரது பெயரைப் பயன்படுத்தி பிரசாரம் செய்வோரிடமிருந்து அவர் தெளிவாகத் தன்னை விலக்கிக் கொள்ளலாம். அரசியலில் ஈடுபடும் எண்ணம் இருந்தால், மாகாண சபை, 13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு, நில உரிமைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி குறித்த அவரது கொள்கைகளை மக்களிடம் வெளிப்படுத்த வேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் C.V. விக்னேஸ்வரன் அவர்களும் மக்கள் கேட்டால் மீண்டும் அரசியலுக்கு வரத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். ஆனால் மக்கள் அவரின் முந்தைய பதவிக்காலத்தை மதிப்பீடு செய்யும் உரிமை கொண்டவர்கள். மீண்டும் பொறுப்பு ஏற்க விரும்பினால், கடந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டார், இம்முறை என்ன மாற்றம் கொண்டுவருவார் என்பதையும் அவர் விளக்க வேண்டும்.

IBC பாஸ்கரன் அவர்களும் புதிய அரசியல் பிரவேசமாகப் பேசப்படுகிறார். அவரிடம் ஊடக மற்றும் நிதி வளங்கள் உள்ளன. அந்த வளங்கள் தனிநபர் தாக்குதல், பழிவாங்கும் அரசியல் அல்லது குறிப்பிட்ட நபர்களுக்கு எதிரான பிரசாரத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படக்கூடாது. உண்மையான மாற்றத்தை விரும்பினால், அவர் கொள்கை அடிப்படையிலான ஒரு தொழில்முறை அணியை உருவாக்க வேண்டும்.

அந்த அணியில் அரசியலமைப்புச் சட்டம், அதிகாரப் பகிர்வு, பொருளாதாரம், பொது நிர்வாகம், காணி உரிமைகள், விவசாயம், மீன்பிடி, தொழில்முனைவு மற்றும் சுற்றுச்சூழல் சட்டம் போன்ற துறைகளில் அறிவும் அனுபவமும் கொண்ட இளைஞர்கள் இருக்க வேண்டும். அவர்கள் மக்களுக்கு 13ஆவது திருத்தத்தின் அதிகாரங்களையும் வரம்புகளையும் விளக்க வேண்டும். மாகாண சபைகள் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, நில உரிமை பாதுகாப்பு மற்றும் உள்ளூர் நிர்வாகத்தில் எவ்வாறு பயன்படலாம் என்பதையும் எடுத்துரைக்க வேண்டும்.

வனவளத் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிற மத்திய நிர்வாக அமைப்புகளுடன் தொடர்புடைய காணிப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு சட்ட மற்றும் நிர்வாக உதவி வழங்கும் அமைப்புகளும் தேவை. புதிய அரசியல் உண்மையாகவே புதியதாக இருக்க வேண்டுமெனில், அது பழைய கோபம், பழைய பகை, பழைய பிரிவினை அரசியலை மீண்டும் மீண்டும் நடத்தக் கூடாது.

தமிழர் அரசியலுக்குத் தேவையானது ஆளுமை வழிபாடு அல்ல; தெளிவான கொள்கை. யார் அரசியலுக்கு வந்தாலும் எனக்கு எதிர்ப்பு இல்லை. புதியவர்கள் வரலாம். இளைஞர்கள் வரலாம். புதிய கட்சிகள் உருவாகலாம். ஆனால் அவர்கள் மக்களிடம் சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்று: அதிகாரப் பகிர்வு குறித்து உங்கள் நிலை என்ன? மாகாண சபைகளை எவ்வாறு பயன்படுத்தப் போகிறீர்கள்? பொருளாதார அபிவிருத்திக்கான திட்டம் என்ன? நில உரிமைகள் குறித்து உங்கள் நடைமுறை தீர்வு என்ன? மத்திய அரசுடன் உறவு எப்படி இருக்கும்? பொறுப்புக்கூறக்கூடிய நிர்வாகத்தை எவ்வாறு உருவாக்கப் போகிறீர்கள்?

மாகாண சபை முறைமை முழுமையான அரசியல் தீர்வு அல்ல. அது தமிழ் மக்களின் அரசியல் இலட்சியங்களின் இறுதி இலக்கு என்றும் நான் கூறவில்லை. ஆனால் அது இலங்கையின் அரசியலமைப்பின் ஓர் அங்கமாக உள்ளது. தற்போதைய அரசியல் சூழலில் பிராந்திய மட்டத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய ஒரே நடைமுறை அமைப்பு அதுவே. அதனை பயன்படுத்தாமல், மாற்று நடைமுறை தீர்வு ஒன்றை முன்வைக்காமல் புறக்கணிப்பது மக்களின் கையில் எஞ்சியுள்ள குறைந்தளவிலான அரசியல் அதிகாரத்தையும் பலவீனப்படுத்தும்.




எனது பிரசாரம் ITAK-ஐ பாதுகாப்பதற்காகவும் அல்ல. குறிப்பிட்ட வேட்பாளரை முன்னிறுத்துவதற்காகவும் அல்ல. எந்த ஒரு கட்சிக்காகவும் அல்ல. இது ஜனநாயகத்திற்கான பிரசாரம். பல ஆண்டுகளாக மறுக்கப்பட்ட தேர்தலை நடத்தச் செய்வதற்கான பிரசாரம். வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தங்களது மாகாண பிரதிநிதிகளைத் தாங்களே தெரிவுசெய்ய வேண்டும் என்ற அடிப்படை உரிமைக்கான பிரசாரம்.

Well Wishers of Tamils in Sri Lanka (WTSL) (இலங்கைவாழ் தமிழர் நலன் விரும்பிகள்) அமைப்பாகவும், உலகளாவிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் செயல்படும் நாங்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். தற்போதைய NPP தலைமையிடம் ஜனநாயக நடைமுறையை மதித்து, தேர்தலுக்கான தெளிவான கால அட்டவணையை அறிவிக்க வேண்டும் என்று தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

இந்த முயற்சி எந்த மறைமுக அரசியல் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படவில்லை. WTSL எந்த கட்சியையும் ஆதரிப்பதில்லை. எமது நோக்கம் ஒரே ஒன்று: ஜனநாயக நடைமுறையை மீட்டெடுப்பது, வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவது, அரசியலமைப்பில் உள்ள மாகாண சபை அமைப்பை மீண்டும் செயல்படுத்துவது.

எனவே, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவரும் முதலில் அந்தத் தேர்தலை நடத்துவதற்காக வெளிப்படையாக குரல் கொடுக்க வேண்டும். தேர்தல் நடந்தபின் பதவி தேடுவது எளிது. ஆனால் தேர்தலை நடத்தச் செய்வதற்காக ஜனநாயகப் போராட்டத்தில் நிற்பதே உண்மையான அரசியல் பொறுப்பு.






# Knabenschiessen என்றால் என்ன?

# சூரிச்சின் பாரம்பரிய மக்கள் விழா

Knabenschiessen என்ற பெயரைக் கேட்கும்போது சிலருக்குத் தவறான புரிதல் ஏற்படலாம். இதன் பொருள் சிறுவர்களைச் சுடுவது அல்ல. இளைஞர்கள் தங்கள் குறிபார்த்துச் சுடும் திறனை வெளிப்படுத்தும் பாரம்பரியப் போட்டியுடன் இணைந்த சூரிச்சின் மிகப்பெரிய மக்கள் விழாக்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்தப் பாரம்பரியம் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. 1656ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் சுமார் 150 சிறுவர்கள் பங்கேற்றதாக முதலாவது எழுத்துப்பூர்வப் பதிவு உள்ளது. தற்போதைய வடிவிலான வருடாந்த விழா 1899 முதல் Albisgüetli பகுதியில் நடைபெற்று வருகிறது.

ஆரம்பத்தில் ஆண் பிள்ளைகள் மட்டுமே பங்கேற்றதால் “Knabenschiessen” என்ற பெயர் உருவானது. ஆனால் 1991ஆம் ஆண்டு முதல் பெண்களும் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக 13 முதல் 17 வயதுடைய, Zürich மாகாணத்தில் வசிக்கும் அல்லது அங்கு பயிற்சிக் கல்வி மேற்கொள்ளும் இளைஞர்கள் போட்டியில் கலந்துகொள்ளலாம். போட்டியின் முடிவில் அதிக புள்ளிகளைப் பெறும் ஒருவர் Schützenkönig அல்லது Schützenkönigin எனக் கௌரவிக்கப்படுகிறார்.

இது துப்பாக்கிச் சுடுதல் போட்டி மட்டுமல்ல. ராட்டினங்கள், பொழுதுபோக்கு விளையாட்டுகள், இசை நிகழ்ச்சிகள், உணவுக் கடைகள் மற்றும் சந்தைக் கூடங்கள் நிறைந்த குடும்ப மக்கள் விழாவாகவும் நடைபெறுகிறது. போட்டியில் பங்கேற்காதவர்களும் விழாவுக்கு வரலாம்.

2026ஆம் ஆண்டுக்கான Knabenschiessen விழா செப்டம்பர் 12 முதல் 14 வரை Albisgüetli பகுதியில் நடைபெறுகிறது.

சூரிச்சில் வாழும் தமிழ் மக்களும் குடும்பத்துடன் சென்று, Switzerland நாட்டின் பழமையான உள்ளூர் பாரம்பரியங்களில் ஒன்றை நேரில் அறிந்துகொள்ளக்கூடிய சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும்.




# வானில் பல ஆண்டுகள் Switzerland-ஐ உலகத்துடன் இணைத்த Airbus A340-300 அருங்காட்சியகத்துக்கு!

சுவிஸ் தேசிய விமான நிறுவனமான SWISS, தனது சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ள கடைசி Airbus A340-300 விமானத்தை, Luzern-இல் உள்ள Swiss Museum of Transport (Verkehrshaus der Schweiz) அருங்காட்சியகத்திற்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது.

**"Switzerland-க்கு ஒரு பரிசு"**


நான்கு இயந்திரங்களைக் கொண்ட இந்த நீண்டதூர விமானம் பல ஆண்டுகளாக SWISS விமானப்படையின் அடையாளங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. தற்போது அது இன்னும் பயணிகள் சேவையில் உள்ளது. ஓய்வு பெற்ற பின்னர், சுவிஸ் விமானப் போக்குவரத்து வரலாற்றின் ஒரு பகுதியாக அருங்காட்சியகத்தில் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட உள்ளது.

திட்டத்தின் மிகப்பெரிய சவால் விமானத்தின் எடை சுமார் 125 தொன். Zürich Airport-இலிருந்து Luzern வரை அதைக் கொண்டு செல்வது மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்து நடவடிக்கையாக இருக்கும்.

அத்துடன் அருங்காட்சியகத்தில் விமானத்திற்கான இடம் அமைத்தல், கண்காட்சியைத் தயாரித்தல் மற்றும் தேவையான அனுமதிகளைப் பெறுதல் போன்ற பணிகளும் உள்ளன.

முழுத் திட்டத்திற்கும் பல மில்லியன் சுவிஸ் பிராங்குகள் செலவாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதி, தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறை விவரங்கள் இன்னும் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளதால், விமானம் எப்போது Luzern சென்றடையும் என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

# சுவிஸ் கால்பந்தின் முக்கிய நிர்வாகி Ralph Zloczower காலமானார்




சுவிஸ் கால்பந்து சங்கத்தின் முன்னாள் தலைவரும், நாட்டின் கால்பந்து வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவருமான Ralph Zloczower, தனது 93ஆவது வயதில் காலமானார்.

சட்டத்தரணியான Zloczower-இன் கால்பந்து நிர்வாகப் பயணம் 1972ஆம் ஆண்டு BSC Young Boys கழகத்தின் தலைவராக ஆரம்பமானது. பின்னர் சுவிஸ் கால்பந்தின் பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளை வகித்த அவர், 2001ஆம் ஆண்டு சுவிஸ் கால்பந்து சங்கத்தின் 32ஆவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவரது எட்டு வருடத் தலைமைக் காலத்தில் சுவிஸ் தேசிய அணி:

2004 ஐரோப்பிய கால்பந்துப் போட்டிக்கு தகுதி பெற்றது.


2006 உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது. 2008 ஐரோப்பிய கால்பந்துப் போட்டியை ஆஸ்திரியாவுடன் இணைந்து நடத்தும் வாய்ப்பைப் பெற்றது.

குறிப்பாக UEFA EURO 2008 போட்டியை Switzerland மற்றும் ஆஸ்திரியாவுக்கு வழங்கச் செய்தது அவரது மிகப்பெரிய நிர்வாகச் சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

2009ஆம் ஆண்டு அவர் தலைவர் பதவியை Peter Gilliéron-க்கு ஒப்படைத்தார். அதேவேளை, சுவிஸ் கால்பந்து சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

சட்ட அறிவு, பேச்சுவார்த்தைத் திறன் மற்றும் தேசிய-சர்வதேச தொடர்புகள் மூலம் சுவிஸ் கால்பந்துக்கு மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்த Ralph Zloczower-க்கு சுவிஸ் கால்பந்து உலகம் விடைகொடுக்கிறது.

# சுவிட்சர்லாந்தின் நடுநிலைமை அவசியம் -
# ஆனால் நடுநிலைமை முன்முயற்சிக்கு ஏன் நான் இல்லை என்கிறேன்




சுவிட்சர்லாந்தின் நடுநிலைமை நமது நாட்டின் வரலாற்று அடையாளத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். ஆனால் இன்றைய அரசியல் விவாதத்தில் ஒரு தவறான புரிதல் உருவாகக்கூடாது:
Neutralitätsinitiative-க்கு எதிராக இருப்பது, சுவிட்சர்லாந்தின் நடுநிலைமைக்கு எதிராக இருப்பதல்ல.

நான் சுவிட்சர்லாந்தின் நடுநிலைமையை உறுதியாக ஆதரிக்கிறேன். அதேவேளையில் தற்போதைய நடுநிலைமை முன்முயற்சியை நிராகரிக்கிறேன்.
ஏன்?

நடுநிலைமைக்கு நீண்ட வரலாறு உள்ளது
சுவிட்சர்லாந்தின் நிரந்தர நடுநிலைமை 1815 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. 1848 இல் உருவான கூட்டாட்சி அரசியலமைப்பில், நாட்டின் நடுநிலைமையைப் பாதுகாப்பது கூட்டாட்சி அரசு மற்றும் நாடாளுமன்றத்தின் பொறுப்புகளில் ஒன்றாக அமைந்தது.

1907 ஆம் ஆண்டு ஹேக் உடன்படிக்கைகள் மூலம் நடுநிலை நாடுகளின் முக்கிய உரிமைகளும் கடமைகளும் சர்வதேச சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டன.

அதன் அடிப்படை மிகவும் தெளிவானது:

சுவிட்சர்லாந்து மற்ற நாடுகளுக்கிடையிலான போரில் நேரடியாகப் பங்கேற்கக்கூடாது; போரில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்புக்கு இராணுவ உதவி வழங்கக்கூடாது; தனது நிலப்பரப்பை போர் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது.

இந்த அடிப்படை நடுநிலைமையில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

ஆனால் சுவிஸ் நடுநிலைமை வரலாற்றில் ஒருபோதும் முற்றிலும் உறைந்த கொள்கையாக இருந்ததில்லை. சர்வதேச சூழ்நிலைகள் மாறியபோது, சுவிட்சர்லாந்து தனது தேசிய நலன், பாதுகாப்பு மற்றும் சர்வதேசப் பொறுப்புகளை கருத்தில் கொண்டு தனது நடுநிலைக் கொள்கையின் நடைமுறையையும் மாற்றி வந்துள்ளது.

அதுவே அதன் பலம்.

இரண்டாம் உலகப் போர் நமக்கு என்ன கற்றுத்தந்தது?

1939 முதல் 1945 வரை நடந்த இரண்டாம் உலகப்போரில் சுவிட்சர்லாந்து அதிகாரபூர்வமாக நடுநிலையாக இருந்தது.

சுவிட்சர்லாந்து நேரடியாக போரில் இணையவில்லை. நாட்டைப் பாதுகாப்பதற்காக இராணுவம் முழுமையாக இயக்கப்பட்டது. மிகவும் ஆபத்தான புவியியல் சூழ்நிலையிலும் சுவிட்சர்லாந்து நேரடியாகப் போர்க்களமாக மாறாமல் இருந்தது.

இது சுவிஸ் நடுநிலைமையின் முக்கியமான வரலாற்று அனுபவமாகும்.

இதனால்தான் நானும் நடுநிலைமையை ஆதரிக்கிறேன்.

ஆனால் அந்த வரலாற்றை ஒரு பக்கம் மட்டும் பார்த்துவிட முடியாது.

போரின் போது சுவிட்சர்லாந்து போரில் ஈடுபட்ட நாடுகளுடன் பொருளாதார உறவுகளைத் தொடர்ந்தது. குறிப்பாக நாசி ஜெர்மனியுடனான சில வர்த்தக மற்றும் நிதி உறவுகள் பின்னர் கடுமையான வரலாற்று ஆய்வுகளுக்கு உட்பட்டன.

Swiss National Bank ஜெர்மனியின் Reichs-bank-இலிருந்து தங்கத்தையும் வாங்கியது. பின்னர் அந்தத் தங்கத்தின் ஒரு பகுதியின் மூலத்தைச் சுற்றி கடுமையான விவாதங்கள் எழுந்தன.

இதிலிருந்து ஒரு முக்கியமான பாடம் கிடைக்கிறது:

ஒரு நாடு நடுநிலையாக இருப்பதால் அதன் எல்லா பொருளாதார நடவடிக்கைகளும் தானாகவே நியாயமானதாகிவிடாது.

ஒரு நடுநிலை நாடும் தனது பொருளாதார மற்றும் அரசியல் முடிவுகளின் விளைவுகளுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

பொருளாதாரத் தடைகள் குறித்து நான் என்ன நினைக்கிறேன்?

நடுநிலைமை முன்முயற்சியை ஆதரிப்பவர்கள் கூறும் ஒரு முக்கியமான வாதத்தை நான் தீவிரமாக எடுத்துக்கொள்கிறேன்:

பொருளாதாரத் தடைகள் சில நேரங்களில் அரசியல் தலைவர்களை விட சாதாரண மக்களை அதிகமாகப் பாதிக்கலாம்.

அது ஒரு உண்மையான கவலை.

உணவு, மருந்து, பணப்பரிமாற்றம், வேலைவாய்ப்பு, எரிசக்தி மற்றும் அத்தியாவசிய வசதிகள் பாதிக்கப்பட்டால், ஏழை மக்களே முதலில் அதன் விலையைச் செலுத்த வேண்டியிருக்கும்.

எனவே நான் அனைத்து தடைகளையும் தானாக ஆதரிப்பதில்லை.

EU அல்லது அமெரிக்கா ஒரு தடையை அறிவித்தால், அதை சுவிட்சர்லாந்து விமர்சனமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நான் கூறவில்லை.

ஒவ்வொரு தடையும் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்:

அது யாருக்கு எதிராக?
எந்த சட்ட அடிப்படையில்?
அது உண்மையில் பயனுள்ளதா?
பொதுமக்களுக்கு என்ன விளைவு?
சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அது உதவுமா அல்லது பாதிக்குமா?
இவற்றை ஆராய்ந்த பின்னர் சுவிட்சர்லாந்தே முடிவு செய்ய வேண்டும்.

எல்லா தடைகளும் ஒன்றல்ல

"Sanktionen" என்று ஒரு வார்த்தையில் அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றாகக் கருதுவது சரியல்ல.

ஒரு முழு நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் பரந்த தடைகள் இருக்கலாம். அவை பொதுமக்களை கடுமையாகப்




பாதிக்கக்கூடும்.

மற்றொரு பக்கம் இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கைகள் இருக்கலாம்:

குறிப்பிட்ட நபர்களின் சொத்துகளை முடக்குதல்;

பயணத் தடை;

குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள்;

போருக்கு தேவையான குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதியை கட்டுப்படுத்துதல்.
இவை அனைத்தின் விளைவுகளும் ஒன்றல்ல.

எனவே “தடைகளுக்கு ஆம் அல்லது இல்லை?” என்பது போதுமான கேள்வி அல்ல.

எந்தத் தடை? யாருக்கு எதிராக? எந்த நோக்கத்திற்காக? என்ன விளைவு?

இதுதான் நாம் கேட்க வேண்டிய கேள்வி.

“தடையா அல்லது பேச்சுவார்த்தையா?” என்பது தவறான தேர்வு
சிலர் இந்த விவாதத்தை:

“Sanktionen oder Verhandlungen?” - “தடைகளா அல்லது பேச்சுவார்த்தையா?”

என்று முன்வைக்கிறார்கள்.

எனக்கு இது தவறான இருவழித் தேர்வு.

பேச்சுவார்த்தை, இராஜதந்திரம் மற்றும் மத்தியஸ்தம் எப்போதும் முக்கியமானவை. சுவிட்சர்லாந்து தனது நல்லெண்ணச் சேவைகளையும் சமாதானப் பணியையும் மேலும் வலுப்படுத்த வேண்டும்.

ஆனால் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு கடுமையான சர்வதேச சட்ட மீறலைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லை.

அதேபோல் ஒரு பொருளாதாரத் தடையை எடுத்துக்கொண்டால், பேச்சுவார்த்தைக்கு கதவு நிரந்தரமாக மூடப்பட்டுவிட வேண்டும் என்பதும் அவசியமில்லை.

Diplomatie மற்றும் Sanktionen கட்டாயமாக ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல.

ஒவ்வொரு சூழ்நிலையையும் தனித்தனியாக மதிப்பிட்டு, எந்த அரசியல் கருவி பயனுள்ளதாக இருக்கும் என்பதை சுவிட்சர்லாந்து சுயமாகத் தீர்மானிக்க வேண்டும்.

ரஷ்யா-உக்ரைன் போர் இந்த முரண்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியது
2022 ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது முழுமையான இராணுவத் தாக்குதலை ஆரம்பித்த பின்னர், சுவிட்சர்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பல பொருளாதாரத் தடைகளை ஏற்றுக்கொண்டது.

இது தற்போதைய Neutralitätsinitiative உருவாகிய முக்கிய அரசியல் பின்னணிகளில் ஒன்றாகும்.

முன்முயற்சியை ஆதரிக்கும் JA தரப்பினர் ஒரு நியாயமான கேள்வியை எழுப்புகின்றனர்:

“EU-வின் தடைகளை சுவிட்சர்லாந்து ஏற்றுக்கொண்ட பின்னர், அது எவ்வாறு நம்பகமான நடுநிலை மத்தியஸ்தராக இருக்க முடியும்?”

இந்தக் கேள்வியை நாம் அலட்சியம் செய்யக்கூடாது.

சுவிட்சர்லாந்து ஒரு மத்தியஸ்த நாடாக இரு தரப்புகளுடனும் பேசக்கூடிய நம்பகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் நான் ஒரு எதிர்க் கேள்வியையும் கேட்கிறேன்:

ஒரு நாடு மற்றொரு சுயாதீன நாட்டை இராணுவ ரீதியாகத் தாக்கி, அதன் எல்லைகளை பலவந்தமாக மாற்ற முயன்று, சர்வதேச சட்டத்தை கடுமையாக மீறும்போது, சுவிட்சர்லாந்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதுதான் நடுநிலைமையா?
எனக்கு அதுதான் நடுநிலைமை அல்ல.

நடுநிலைமை என்பது தாக்குதல் நடத்திய தரப்புக்கும் தாக்குதலுக்குள்ளான தரப்புக்கும் இடையே உண்மையை மறைத்து செயற்கையான சமத்துவத்தை உருவாக்குவது அல்ல.

இங்கு ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது:

சுவிட்சர்லாந்து இராணுவ ரீதியாக போரில் பங்கேற்காமல் இருக்க முடியும்.

அதே நேரத்தில்:

“இங்கு சர்வதேச சட்டம் மீறப்பட்டுள்ளது” என்று தெளிவாகக் கூறவும் முடியும்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல.
இராணுவ ரீதியாக நடுநிலையாக இருப்பது ஒரு விடயம்.

சர்வதேச சட்டத்தைப் பாதுகாப்பது மற்றொரு விடயம்.

இவை இரண்டையும் சுவிட்சர்லாந்து ஒரே நேரத்தில் செய்ய முடியும்.

UNO மட்டும் முடிவு செய்ய வேண்டுமா?
சிலர் ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தால் மட்டுமே சுவிட்சர்லாந்து பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நானும் UNO மற்றும் சர்வதேச சட்டத்தின் முக்கியத்துவத்தை உறுதியாக ஆதரிக்கிறேன்.

ஆனால் UNO Security Council அமைப்பில் ஒரு அடிப்படைப் பிரச்சினை உள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பினர்களுக்கு veto அதிகாரம் உள்ளது.

ஒரு கடுமையான சர்வதேச சட்ட மீறல் நடந்தாலும், அந்த ஐந்து நாடுகளில் ஒன்று ஒரு தீர்மானத்தைத் தடுக்க முடியும்.

அப்போது கேள்வி எழுகிறது:

UNO Security Council நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதற்காக சுவிட்சர்லாந்தும் எதுவும் செய்யக்கூடாதா?
எனது பதில்:

இல்லை.

ஒரு வல்லரசின் veto சுவிட்சர்லாந்தின் சுயாதீன வெளிநாட்டுக் கொள்கையை மறைமுகமாக நிர்ணயிக்கக் கூடாது.

சிறிய நாடான சுவிட்சர்லாந்திற்கு சர்வதேச சட்டம் ஏன் முக்கியம்?
சர்வதேச சட்டம் என்பது சுவிட்சர்லாந்து மற்ற நாடுகளுக்கு வழங்கும் ஒரு ஒழுக்கப் பாடம் அல்ல.

அது நமது சொந்த தேசிய நலனுக்கும் பாதுகாப்புக்கும் முக்கியமானது.
சுவிட்சர்லாந்து ஒரு சிறிய நாடு.

பெரிய நாடுகள் தங்களின் இராணுவ வலிமையைப் பயன்படுத்தி சிறிய நாடுகளின் எல்லைகளை மாற்றலாம் என்ற உலக ஒழுங்கு உருவானால், அது சுவிட்சர்லாந்திற்கும் பாதுகாப்பான உலகமல்ல.

சிறிய நாடுகளுக்கு:

“வலிமையானவன் சொல்வதே சட்டம்”

என்ற உலகத்தை விட,

“சட்டம் அனைவருக்கும் சமம்”

என்ற உலக ஒழுங்கே முக்கியம்.

எனவே சர்வதேச சட்டத்தைப் பாதுகாப்பது சுவிட்சர்லாந்தின் தேசிய நலனின் ஒரு பகுதியாகும்.

மத்தியஸ்தப் பங்கை மேலும் வலுப்படுத்த வேண்டும்.
இந்த இடத்தில் JA தரப்புடன் எனக்கு முக்கியமான ஒற்றுமை உள்ளது.

சுவிட்சர்லாந்து தனது Good Offices பாரம்பரியத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

(Good Offices / Gute Dienste) நல்லெண்ணச் சேவைகள்)என்பது, சுவிட்சர்லாந்து போன்ற ஒரு நடுநிலை நாடு மோதலில் இருக்கும் நாடுகளுக்கு இடையில் நேரடி தரப்பாக மாறாமல், பேச்சுவார்த்தை, தொடர்பு, மத்தியஸ்தம் மற்றும் சமாதான முயற்சிகளுக்கு உதவுவதை குறிக்கிறது.)

Geneva சர்வதேச பேச்சுவார்த்தைக்கான மையமாகத் தொடர வேண்டும்.

போரில் ஈடுபட்டுள்ள தரப்புகளுடன் தொடர்புகளை திறந்தவையாக வைத்திருக்க வேண்டும். Ceasefire மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவ வேண்டும்.

போர்க்கைதிகள், பொதுமக்கள், அகதிகள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவியை அதிகரிக்க வேண்டும். ஏனெனில் எந்தப் போரும் இறுதியில் ஒரு அரசியல் தீர்வையும் பேச்சுவார்த்தையையும் தேடும்.

ஆனால் அதற்காக சுவிட்சர்லாந்தின் மற்ற அரசியல் கருவிகளை அரசியலமைப்பின் மூலம் முன்கூட்டியே கைவிட வேண்டிய அவசியமில்லை.

நாளைய உலகம் எப்படி இருக்கும்?
இன்றைய பாதுகாப்பு என்பது டாங்கிகள், விமானங்கள் மற்றும் படைகள் மட்டுமல்ல.

Cyber attacks, மின்சார வலையமைப்பின் மீதான தாக்குதல்கள், மருத்துவமனைகள் மற்றும் வங்கிகளின் கணினி அமைப்புகளை முடக்குதல், தவறான தகவல் பரப்புதல், பொருளாதார அழுத்தம் மற்றும் hybrid threats ஆகியவை புதிய பாதுகாப்புச் சவால்களாக உள்ளன.

2040 அல்லது 2050 இல் உலகம் எப்படி இருக்கும் என்று இன்று யாராலும் நிச்சயமாகக் கூற முடியாது.

அதனால் எதிர்கால தலைமுறைகளின் அரசியல் நடவடிக்கைச் சுதந்திரத்தை இன்று அரசியலமைப்பில் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தக் கூடாது.

ஒரு நல்ல அரசியலமைப்பு அடிப்படை மதிப்புகளைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இன்னும் உருவாகாத ஒவ்வொரு எதிர்கால நெருக்கடிக்கும் ஒரே அரசியல் பதிலை இன்றே கட்டாயப்படுத்தக்கூடாது.

சுவிட்சர்லாந்தின் இறையாண்மை என்றால் என்ன?

எனக்கு Souveränität - இறையாண்மை - என்றால்:

Bern-இல் எடுக்க வேண்டிய முடிவை Brussels எடுக்கக்கூடாது.

ஆனால் அதேபோல் Moscow தீர்மானிக்கக்கூடாது.

Washington தீர்மானிக்கக்கூடாது.

Beijing தீர்மானிக்கக்கூடாது.

UNO Security Council-இல் ஒரு வல்லரசின் veto கூட நமது அனைத்து அரசியல் முடிவுகளையும் மறைமுகமாகத் தீர்மானிக்கக்கூடாது.

சுவிட்சர்லாந்து தனது சட்டம், தனது நலன், சர்வதேச சட்டம் மற்றும் மனிதாபிமானப் பொறுப்பை மதிப்பிட்டு தானே முடிவு செய்ய வேண்டும்.

அதுதான் எனக்கு சுயாதீன நடுநிலைமை.

நான் விரும்பும் சுவிஸ் நடுநிலைமை

எனக்கு வேண்டியது மௌனமான நடுநிலைமை அல்ல.

எனக்கு வேண்டியது எந்த ஒரு பெரிய வல்லரசையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் நடுநிலைமையும் அல்ல.

எனக்கு வேண்டியது:

போரில் ஈடுபடாத சுவிட்சர்லாந்து.

இராணுவக் கூட்டணியில் இணையாத சுவிட்சர்லாந்து.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பாலமாக இருக்கும் சுவிட்சர்லாந்து.

சர்வதேச சட்டத்தைப் பாதுகாக்கும் சுவிட்சர்லாந்து.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவி செய்யும் சுவிட்சர்லாந்து.

அதே நேரத்தில் தனது அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளைத் தானே எடுக்கக்கூடிய சுவிட்சர்லாந்து.

இதனால்தான் எனது நிலைப்பாடு தெளிவானது:

நடுநிலைமைக்கு - ஆம்.

போரில் பங்கேற்பதற்கு - இல்லை.

சமாதானம் மற்றும் பேச்சுவார்த்தைக்கு - ஆம்.

சர்வதேச சட்டத்திற்கு - ஆம்.

மனிதாபிமான உதவிக்கு - ஆம்.

பொருளாதாரத் தடைகளை கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவதற்கு - இல்லை.

ஒவ்வொரு தடையையும் அதன் சட்ட அடிப்படை, பயன் மற்றும் மனிதாபிமான விளைவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்வதற்கு - ஆம்.

சுவிட்சர்லாந்தின் சுயாதீன முடிவெடுக்கும் உரிமைக்கு - ஆம்.

ஆனால் அந்த உரிமையை அரசியலமைப்பின் மூலம் தேவையின்றி கட்டுப்படுத்தும் Neutralitätsinitiative-க்கு - இல்லை.

நடுநிலைமை என்பது மௌனம் அல்ல.

நடுநிலைமை என்பது சர்வதேச சட்ட மீறலுக்கு முன்னால் கண்களை மூடுவது அல்ல.

நடுநிலைமை என்பது நமது கைகளைக் கட்டிக்கொள்வதும் அல்ல.

போரில் இணையாமல், சமாதானத்திற்காகச் செயல்பட்டு, சர்வதேச சட்டத்தை மதித்து, சுவிட்சர்லாந்தின் நலனுக்காக சுயமாக முடிவெடுக்கும் திறனே வலுவான சுவிஸ் நடுநிலைமை.

அதனால்தான் நான் Neutralitätsinitiative-க்கு NEIN சொல்கிறேன்.


**சுதாகரன் கணபதிப்பிள்ளை**



# ஆட்டம் கண்ட ராஜபக்சாக்களின் அரசியல் எதிர்காலம்

அது மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி அக் கட்சியில் இருந்து முப்பதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார். அதேபோல் இலங்கை முஸ்லிம் காங்கிரஸை உடைத்துப் பல கட்சிகளை உருவாக்கித் தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பியசேனாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டார். இவ்வாறு ஏனைய கட்சிகளைப் பிளவுபடுத்தி உறுப்பினர்களை சேர்த்துக் கொண்டு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை உறுதிப்படுத்தித் தமக்குத் தேவையான சட்டமூலங்களை இயற்றியும் திருத்தியும் மாற்றிக் கொண்டார். அரசியல் அமைப்பின் 18 வது யாப்புத் திருத்தம், 19 வது திருத்தம், திவிநெகும எனப் பல சட்ட மூலகங்களைத் தமக்குச் சாதகமாக உருவாக்கினார். இவற்றுள் பல திருத்தங்கள் சிறுபான்மையினருக்குப் பாதகமானது.



சின்னத்தம்பி குருபரன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தாம் கூறிய வாக்குறுதிகளைப் பெரும்பாலும் நிறைவேற்றாதவராகவே காணப்பட்டார். இந்த விடயத்திலும் ஒரு நடிகனாகவே செயற்பட்டார். இந்தியாவில் வைத்து அளித்த வாக்குறுதிகள், அமெரிக்கா போன்ற மேலைத்தேய நாடுகளுக்கு அளித்த வாக்குறுதிகள் சிறுபான்மை மக்களின் கட்சிப் பிரதிநிதிகள், வட மாகாண அரசு (ஆளுனர், பிரதம செயலாளர்) அகதிகளை மீளக்குடியமர்த்தல், காணிச் சுவிகரிப்பு, அதி உயர் பாதுகாப்பு வலயம், இராணுவக் குறைப்பு போன்ற விடயங்கள் தொடர்பான வாக்குறுதிகள் பெரும்பாலும்நிறைவேற்றப்படவில்லை. ஊதாரணமாக இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பதின்மூன்று பிளஸ் பற்றிக் கூறிய மறுவாரமே வாக்குறுதி புஸ்வாணமாகியது. இது போல் பலவற்றைக் கூறலாம்.

ஜாதிக் ஹெல உறுமய 2014 ஆண்டு பிற்பகுதியில் மகிந்தவுடனான உறவை முறித்துக் கொள்ளும் வரை சிறுபான்மையினர் தொடர்பாகத் துவேசம் பேசிவந்தனர். 2014 இல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சு

தொடங்கும் வரை பொதுப் பல சேனா ராஜபக்ஷ குடும்பத்தினரின் பாதுகாப்பில் இருந்து கொண்டு அடாவடித்தனங்கள் செய்து வந்தனர். அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர், தான் ஒரு பௌத்த துறவி என்பதையும் மறந்து ஒரு ரவுடி போல் செயற்பட்டதை யாவரும் அறிந்திருப்பார்கள். அவர்களின் அட்டகாசம் தொடர்பாகப் மகிந்தவிடமும் கோட்டாபயவிடமும் பலர் முறையிட்ட போதும் அவை எதனையும்; கவனத்தில் கொள்ளவில்லை. பல இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டு இடித்து அழிக்கப்பட்ட போதும், சிறுபான்மை மக்கள் தாக்கப்பட்டபோதும், பேருவளை, அளுத்கம, தர்ஹாநகர் ஆகிய இடங்களில் திட்மிட்டு இனக்கலவரம் ஏற்படுத்தப்பட்டுப் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுச் சொத்துக்களும் நாசமாக்கப்பட்ட போதும், பொதுப் பல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் அலுவலகத்திற்குச் சென்று அட்டகாசம் செய்த போதும் மிதவாதம், சம உரிமை பற்றிப் பேசிய தேரர் ஒருவர் தாக்கப்பட்ட போதும், பல ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்பட்டபோதும், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்ட போதும் கண்டும் காணாதது போல் மகிந்த செயற்பட்டார். இவ்வேளையில் பொலிசாரும், பாதுகாப்புப்படையினரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். சில வேலைகளில் பொலிசும் தாக்கப்பட்டனர். போலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறை;ப்பாடுகளுக்கு எந்த ஒரு பதில் நடவடிக்கையும் எடுக்கப்படாது மௌனம் சாதித்தனர். இத்தனையும் மாற்றமொன்று நிகழும் அதில் தோல்வியடைவோம் என்பதை உணராது செயற்பட்டமையின் விளைவுதான் 2015 ஜனாதிபதித் தேர்தலின் தோல்வியடையக் காரணமாக அமைந்தன.

இனி மகிந்த ராஜபக்ஷவும், அவர் குடும்பத்தினரும், அவரைச் சார்ந்தவர்களும், படையினரும் 2015 ஜனாதிபதித் தேர்தலின் தோல்விக்கு எவ்வாறு காரணமானார்கள் என்பதை நோக்குவோம்.

1. மகிந்த ராஜபக்~ சிறுபான்மையினர் தொடர்பாக கடைப்பிடித்து வந்த இனவாத, பேரினவாதக் கொள்கைகள்.

2. இறுதி யுத்த காலங்களில் தான் பிறப்பித்த கட்டளைகளும், கடைப்பிடித்த கொள்கைகளும்.



3. இறுதி யுத்தம் முடிவிற்கு வருவதற்கு ஆயுதம், தளபாடம், உபகரணங்கள், தொழினுட்ப உதவிகள், படைப்பல உதவிகள், ஆலோசனைகள் வழங்கி பக்கபலமாக இருந்த சோனியா காந்தி (இந்திய காங்கிரஸ்) அரசையும், அமெரிக்கா போன்ற நாடுகளையும் புறந்தள்ளிக் கொண்டு சீனா, பாக்கிஸ்தான் பக்கம் சார்ந்து நின்று சீனாவின் முத்துமாலைத்திட்டத்தினுடாக இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்க முற்பட்டமை. இதனால் வல்லரசு நாடுகளும், இந்தியாவும் ஆட்சி மாற்றத்தை விரும்பியமை.

4. இறுதி யுத்தத்தின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள்.

5. மகிந்தவின் ஆட்சி நீடித்தால் கேணல் கடாபி, கொஸ்னி முபாரக், சதாம் ஹீசைன்;, ரோபர்ட்; முகாவே, பிடல் கஸ்ரோ, அலி அக்பர் ஹன்சன்யானி ஆகியோர் போன்று மேற்குலகத்திற்குச் சவால் விடுகின்ற தலைவராக உருவாகிவிடலாம் என நம்பி ஆட்சி மாற்றத்திலே குறியாக இருந்தமை.

6. மாகாண அரசுகளின் அதிகாரங்களைப் பல திருத்தச் சட்டமூலங்கள் ஊடாகப் பறிக்கப்பட்டமை.

7. யாப்பின் 18, 19 ஊடாகத் திருத்தங்களைச் செய்து தமக்குச் சாதகமான சட்ட மூலங்களை உருவாக்கியமை.

8. இறுதி யுத்தத்தின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல், யுத்தக் குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரனைப் பொறிமுறை ஒன்றுக்கும், குறைந்த பட்சம் கற்றுத்தந்த பாடங்கள் நல்லினக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தானும் நடைமுறைப்படுத்த எந்தவித பூர்வாங்க நடவடிக்கையும் மேற்கொள்ளாது. தட்டிக் கழித்ததோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சமவாயத்தின் செயற்பாடுகளில் குறைகூறிக் கொண்டு



அவர்களுக்குப் புலிச்சாயம் பூசி முரண்டு பிடித்தமை.

9. தமிழர் தாயகப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட குடியேற்றம்.

10. தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டமை.

11. யுத்தம் முடிந்த பின்னரும் கெடுபிடிகளைத் தளர்த்தாது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புடன் வைத்திருந்தமை.

12. உயர் பாதுகாப்புப் பிரதேசமெனக் கூறித் தமிழர்களின் பெருமளவு காணிகள் கபளீகரம் செய்யப்பட்டதோடு, அப்பிதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த மறுத்தமை.

13. சகல துறைகளிலும் இராணுவத் தலையீட்டை ஊக்குவித்தமை.

14. முப்படையினர் செய்யும் தவறுகளையும், ஆக்கிரமிப்புக்களையும் கண்டும் காணாமல் இருந்தமை.

15. பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சர் போல் செயற்பட்டது மட்டுமல்லாது சகல துறைகளிலும் தலையிட்டமை.

16. தமிழர் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட காணிச் சுவிகரிப்புக்களை ஊக்குவித்தமை.

17. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு படைத்துறை சார்ந்த அதிகாரிகளை ஆளுனர்களாகவும், அரசாங்க அதிபர்களாகவும் நியமித்துத் தமது எண்ணங்களை நிறைவேற்றியமை.

18. வடமாகாண அரசின் நியாயமான நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருந்ததோடு ஆளுனரும், பிரதம செயலாளரும் குட்டி ஜனாதிபதி போல் செயற்பட ஊக்குவித்தமை.

19. மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் அவர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்ததோடு, அவர்களை நிர்க்கதி நிலைக்கு இட்டுச் சென்றமை.

20. தமிழர் பிரதேசங்களில் தொழில் செய்யவும், மீன் பிடிக்கவும், கொந்துராத்து வேலை செய்யவும், கட்டுமானப்பணிகளிலும் படையினரின் ஆதரவுடன் பெரும்பான்மையினரை அனுமதித்தமை.

21. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் திட்டமிட்டுக் கலாசாரப் பாரம்பரியங்களைச் சீரளித்தமை (போதைப் பொருள் பாவனை, மதுபானம், பாலியல் வல்லுறவு, கொள்ளைகள், வாள் வெட்டுக் வெட்டுக் குத்துக்கள் என்பவற்றைக் கண்டும் காணாதது போல் செயற்பட்டமை).

22. 2009 இறுதி யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் 75 க்கு மேற்பட்ட மதுபானசாலைகளைத் தாபித்ததோடு, கடற்கரைப்பிரதேசங்களிலும், பிரதான நகரங்களிலும், உல்லாசப்பயண விடுதிகளைத் தாபித்தமை (இவ்விடுதிகள் சிலவற்றில் பல இளம் யுவதிகள் விபச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.)

23. அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்குப் பல்கலைக் கழகங்களில் ஏற்பட்ட கலவரங்களுக்கும்; பெரும்பான்மை இனமாணவர்களின் அடாவடித்தனங்களுக்குப் பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் துணைபோனமை.

24. யுத்த வடுக்கள் ஒருபுறம் இருக்க இறுதியுத்தத்தில் இறந்து போன சாதாரண மக்களின் (வீடுகளில்) அஞ்சலியைக் கூடச் செய்யவிடாமல் தடுத்ததோடு, செய்தவர்கள் தண்டிக்கப்பட்டமை.

25. அமைச்சர்களும், பிரதி அமைச்சார்களும், உயர் அதிகாரிகளும் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டதோடு ஒவ்வொருவருக்கும் தனித்தனழயாகக் கோவைகள் உருவாக்கியமை. இது தபால் மூல வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

*அடுத்த வாரம் தொடரும்...*




## கூடுதல் தண்டவாளங்களுக்கு இடம் தேவை:

# Winterthur பிரதான ரயில் நிலையக் கட்டடத்தை நகர்த்த யோசனை!

Winterthur பிரதான ரயில் நிலையத்தில் எதிர்கால ரயில் போக்குவரத்துக்குத் தேவையான இடத்தை உருவாக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க நிலையக் கட்டடத்தை ஆறு முதல் எட்டு மீட்டர் வரை நகர்த்த முடியுமா என்பது குறித்து ஆய்வு நடத்த வேண்டும் என இரண்டு நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Winterthur பிரதான ரயில் நிலையத்தில் நெரிசல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உச்ச நேரங்களில் சுமார் 15,000 பயணிகள் நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் தற்போது ஏழு நேரடி தண்டவாளங்கள் மட்டுமே இருப்பதால், வளர்ந்துவரும் ரயில் போக்குவரத்துக்கு எதிர்காலத்தில் போதுமான இடம் இருக்காது எனக் கருதப்படுகிறது.

கூடுதல் தண்டவாளங்களை அமைக்க வேண்டுமானால், 1857-1860 காலப்பகுதியில் கட்டப்பட்ட பாதுகாக்கப்பட்ட வரலாற்று நிலையக் கட்டடம் அமைந்துள்ள திசையில் விரிவாக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் EVP கட்சியைச் சேர்ந்த Daniela Roth-Nater மற்றும் Mitte கட்சியைச் சேர்ந்த Iris Kuster ஆகிய இரு Winterthur நகரசபை உறுப்பினர்களும், நிலையக் கட்டடத்தை தண்டவாளங்களிலிருந்து விலகி Post கட்டடத்தை நோக்கி ஆறு முதல் எட்டு மீட்டர் நகர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் செலவுகளை ஆராயுமாறு நகர நிர்வாகத்திடம் கோரியுள்ளனர்.

இந்த யோசனை முற்றிலும் புதிதல்ல. 2021ஆம் ஆண்டு Winterthur நகரமும் SBB நிறுவனமும் நடத்திய ஆய்வில், கட்டடத்தைத் தொழில்நுட்ப ரீதியாக நகர்த்துவது சாத்தியம் எனக் கண்டறியப்பட்டது. எனினும் கட்டடத்தை முதலில் உறுதிப்படுத்தி, சிறப்புக் கட்டமைப்பின் மீது படிப்படியாக நகர்த்த வேண்டியிருப்பதால் பணிகள் மிகவும் சிக்கலானதும் செலவுமிக்கதுமாக இருக்கும்.

அதேவேளை, வரலாற்றுக் கட்டடம் அதன் தற்போதைய இடத்துடன் கொண்டுள்ள பாரம்பரியத் தொடர்பு இழக்கப்படலாம் என Zürich மாகாண நினைவுச்சின்னப் பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது.

Winterthur நிலையக் கட்டடத்தை நகர்த்துவதற்கான முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை. இது தொடர்பாகச் செலவு மற்றும் நடைமுறைச் சாத்தியத்தை ஆராயக் கோரும் அரசியல் முன்மொழிவு மட்டுமே. இதற்குப் பதிலளிக்க Winterthur நகரசபைக்கு மூன்று மாதங்கள் அவகாசம் உள்ளது.




# மருத்துவமனையில் இருந்த குடும்பத்தவரைத் தேடி 24 கிலோமீற்றர் பயணித்த நாய்!

பேர்ன்: சுவிட்சர்லாந்தின் வாட்டன்வில் பகுதியில் காணாமல் போன “ஹாச்சிட்டோ” என்ற ஜப்பானிய அகிட்டா இன நாய், பேர்ன் நகரிலுள்ள Sonnenhof மருத்துவமனைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பிய சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

2020 டிசம்பர் 16ஆம் தேதி இந்தச் சம்பவம் நடைபெற்றது. அப்போது ஹாச்சிட்டோவின் குடும்பத்தைச் சேர்ந்த கேதி ஷ்னைடர் நீண்டகாலமாக Sonnenhof மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அன்று மாலை வீட்டிலிருந்து வெளியே சென்ற ஹாச்சிட்டோ, Worb, Rüfenacht, Gümligen மற்றும் Murifeld வழியாகச் சுமார் 12 கிலோமீற்றர் பயணித்து மருத்துவமனையின் நுழைவாயிலை அடைந்ததாக அதன் GPS கழுத்துப்பட்டையின் பதிவுகள் காட்டின.

மருத்துவமனை வாசலில் மஞ்சள் நிற நாய் ஒன்று நின்றதாக அங்கிருந்த ஊழியர்கள் பின்னர் குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளனர். நாயை மருத்துவமனைக்குள் அனுமதிக்காததால், சிறிது நேரத்தில் அது அங்கிருந்து சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

அன்றிரவு சுமார் 11 மணியளவில் ஹாச்சிட்டோ மீண்டும் வீட்டிற்குத் திரும்பியது. மருத்துவமனைக்குச் சென்று வீடு திரும்பிய மொத்தப் பயணத் தூரம் சுமார் 24 கிலோமீற்றர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தை நாய் சுமார் ஆறு மணிநேரத்தில் நிறைவு செய்துள்ளது.

ஹாச்சிட்டோ அந்த மருத்துவமனையை எவ்வாறு கண்டுபிடித்தது என்பது இன்றுவரை மர்மமாகவே உள்ளது.

குடும்பத்தவர்களின் கருத்துப்படி, மருத்துவமனையில் இருந்த கேதியின் இருப்பை அது உணர்ந்திருக்கலாம் அல்லது முன்னர் சென்ற பாதைகள் மற்றும் வாசனைகளை நினைவில் வைத்திருக்கலாம்.

தற்போது பத்து வயதாகும் ஹாச்சிட்டோ, அதன் பின்னர் இவ்வாறு வீட்டிலிருந்து தப்பிச் செல்வதில்லை எனக் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.




# லண்டனில் விஜய் தலைமையில் 11 ஆயிரம் கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

லண்டனில் கார் உதிரி பாக நிறுவனத்துடன் தமிழக முதலமைச்சர் விஜய் தலைமையில் 11 ஆயிரம் கோடி இந்திய ரூபாயில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடபட்டன.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:-

இங்கிலாந்து, லண்டன் நகரில் சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் லிமிடெட் (Samvardhana Motherson International Ltd.,) நிறுவனம் அதன் ஐரோப்பா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து, வழிகாட்டி நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் சுமார் ரூ.11ஆயிரம் கோடி முதலீட்டில், வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, கூட்டிணைப்பு (Assembly) மற்றும் தளவாட வசதிகள் ஆகிய துறைகளில் சுமார் 7,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், சம்வர்தனா மதர்சன் இன்டர்நேஷனல் குழுமத்தின் உலகளாவிய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புத் துறைத் தலைவர் பாரி பெயிண்டர் மற்றும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தீபக் ஜேக்கப், இ.ஆ.ப. ஆகியோர் கையெழுத்திட்டு, ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் குமரன் பெரியசாமி, IFS, நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## அனுராதபுரம் பேரணி சர்ச்சை:

# அர்ச்சுனாவின் உரை குறித்து TID விசாரணை!

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) பேரணியின் போது, தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பை ஊக்குவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு (TID) பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேணியின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, பொலிஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பேரணியில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை (LTTE) ஊக்குவிப்பதாகவோ அல்லது ஆதரிப்பதாகவோ அமைந்திருந்ததாகக் குற்றம் சாட்டி, சிவில் சமூக ஆர்வலர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வுத் துறையிடம் (CID) முறைப்பாடு அளித்துள்ளதை பொலிஸார் முன்னதாகவே உறுதிபடுத்தியிருந்தனர்.

செப்டம்பர் 12 அன்று அனுராதபுரம் மாநகர சபைக் மைதானத்தில் நடைபெற்ற SLPP பேரணியில் உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வெளியிட்ட கருத்துகளே இச்சிறப்புக்குரிய சர்ச்சைக்கு மையமாக அமைந்துள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை உள்ளடக்கிய அரசியல் ஒப்பீடு ஒன்றை மேற்கொண்டபோது, இராமநாதன் அர்ச்சுனா தனது உரையில் தன்னை ஒரு “புலி” (Tiger) என்று குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு (LTTE) தொடர்ந்து தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



### விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு

# கொட்டகலையில் பிரமாண்ட சிலைகள் கையளிப்பு!

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இலங்கை விஷ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொட்டகலை கொமர்ஷியல் வாவியில் விசர்ஜனம் (கரைத்தல்) செய்யப்படுவதற்கு விநாயகர் சிலைகளை கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை கொட்டகலையில் மாணிக்கப்பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரமாண்டமான 17 விநாயகர் சிலைகள் திருவருள் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டு கொட்டகலையை சூழ உள்ள நகரங்கள் மற்றும் தோட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.





இந்த சிலைகள் திங்கட்கிழமை நடைபெற்றவிநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோவில்களில் பூஜை வழிபாடுகளுக்கு வைக்கப்பட்டு 20.09.2026 ஞாயிற்றுக்கிழமை கொட்டகலை கொமர்ஷியல் வாவியில் விசர்ஜனம் (கரைத்தல்) செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை விஷ்வ ஹிந்து பரிஷத் விநாயகர் சதுர்த்தி ஏற்பாட்டு குழு தலைவர் ஆர். விஜயபாலன் ஜி தலைமையில் நடைபெற்றதுடன். ஏற்பாட்டு குழுவின் அங்கத்தவர்கள், நகர வர்த்தகர்கள் பொது மக்கள் என அதிகளவானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு கஞுதாவளை பிள்ளையார் ஆலயத்தில் மெய்சிலிர்க்க வைத்த சம்பவம்!

விநாயகப் பெருமான் அவதரித்த திருநாளாகக் கருதப்படும் விநாயகர் சதுர்த்தி பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஆலயங்களில் விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் இடம்பெற்றதுடன், பெருமளவான பக்தர்களும் வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

விநாயகர் சதுர்த்தி மற்றும் ஆலயத் திருவிழாக்கள் இறைவனின் அருளைப் பெற்று மன அமைதியையும் ஆன்மீக நிறைவையும் பெறும் புனித நாளாக பக்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மட்டக்களப்பு களுதாவளை கல்லடி பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று பக்தர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

விநாயகப் பெருமானின் திருவுருவம் முன்னிலையில் யானை ஒன்று முழந்தாளிட்டு, தனது தும்பிக்கையை உயர்த்தி வணங்கிய காட்சி அங்கிருந்தவர்களை ஆச்சரியத்திலும் பக்திப் பரவசத்திலும் ஆழ்த்தியுள்ளது.

யானை விநாயகரை வணங்குவது போன்ற இந்த அரிய காட்சி தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்து வருவதுடன், காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் அமைந்துள்ளது. நேற்றையதினம் முழுமுதல் கடவுளாம் விநாயககடவுள் பிறந்ததாக புராணங்கள் கூறுகின்றது. அந்தவகையில் ஆலயங்கள் தோறும் விநாயக பெருமானுக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்றது.

இன்னிலையில் களுதாவளை கல்லடி பிள்ளையார் ஆலயத்தின் வீதியில், விநாயகப் பெருமானின் திருமுன்னே ஒரு யானை முழந்தாளிட்டுத் தன் தும்பிக்கையை உயர்த்தி வணங்கிய காட்சி, காண்போர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைப்பதாக அமைந்துள்ளது.




# 2027 சுவிட்சர்லாந்து: AHV முதல் காலநிலை வரை - அரசின் முக்கிய திட்டங்கள்!

## 2027 க்கான சுவிட்சர்லாந்தின் முக்கிய இலக்குகளை அறிவித்த கூட்டாட்சி அரசு

பேர்ன்: 2027ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து முன்னுரிமை வழங்கவுள்ள முக்கிய அரசியல் இலக்குகளை கூட்டாட்சி அரசு அறிவித்துள்ளது. கூட்டாட்சி தலைவர் Guy Parmelin, செப்டம்பர் 14ஆம் தேதி நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் (Ständerat) இந்தத் திட்டங்களை முன்வைத்தார். இவை 2023-2027 சட்டமன்ற காலத்திற்காக ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நான்கு முக்கிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

அதன்படி, பொருளாதார வளம் மற்றும் டிஜிட்டல் வளர்ச்சி, தேசிய மற்றும் தலைமுறைகளுக்கிடையிலான ஒற்றுமை, பாதுகாப்பு மற்றும் சர்வதேச அமைதி, காலநிலை மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பு ஆகிய நான்கு துறைகள் 2027ஆம் ஆண்டிலும் அரசின் முக்கிய முன்னுரிமைகளாக இருக்கும்.

பொருளாதாரத் துறையில் சுவிட்சர்லாந்தை போட்டித்தன்மை கொண்ட தொழில் மற்றும் முதலீட்டு நாடாகத் தொடர்ந்து வைத்திருக்க 2028-2031 பொருளாதார Standortförderung திட்டத்தை அரசு முன்னெடுக்க உள்ளது.

டிஜிட்டல் மாற்றம், புதுமை, ஆராய்ச்சி மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான அணுகல் ஆகியவையும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியின் முக்கிய பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

பொதுமக்களுக்கு முக்கியமான மற்றொரு அம்சமாக AHV 2030 சீர்திருத்தம் உள்ளது. முதியோர் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கான காப்புறுதி அமைப்பான AHV-யின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கான சீர்திருத்த முன்மொழிவை 2027இல் கூட்டாட்சி அரசு நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. அதேபோன்று Invalidenversicherung (IV) தொடர்பான ஒருங்கிணைப்பு சீர்திருத்தமும் முன்னெடுக்கப்பட உள்ளது.

போக்குவரத்துத் துறையில் “Verkehr ’45” திட்டத்தின் மூலம் ரயில், சாலை மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்தை ஒருங்கிணைத்து நீண்டகால அடிப்படையில் மேம்படுத்துவதற்கான திட்டத்தை அரசு முன்னெடுக்க உள்ளது.

பாதுகாப்புத் துறையில் குடும்ப வன்முறை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்கொள்வதற்கான புதிய மூலோபாயம் மற்றும் சுவிட்சர்லாந்தின் பயங்கரவாத எதிர்ப்பு மூலோபாயத்தின் புதுப்பிப்பு ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன. எதிர்பாராத பேரிடர்களைச் சமாளிப்பதில் ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்த EU Civil Protection Mechanism (UCPM) அமைப்பில் சுவிட்சர்லாந்து இணைவது தொடர்பான முன்மொழிவையும் அரசு சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

விவசாயத் துறையில் Agrarpolitik 2030+ மூலம் அடுத்த எட்டு ஆண்டுகளுக்கான விவசாயக் கொள்கைச் சட்ட கட்டமைப்பை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. காலநிலைப் பாதுகாப்பில், $CO_2$ சட்டத்தை திருத்துவதன் மூலம் 2030க்குப் பின்னரான சுவிட்சர்லாந்தின் காலநிலைக் கொள்கையை நிர்ணயிப்பதும் 2027ஆம் ஆண்டின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

இந்த 2027 இலக்குகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் புதிய சட்டங்கள் என்ற பொருளல்ல. இவை அடுத்த ஆண்டில் கூட்டாட்சி அரசு முன்னெடுக்க விரும்பும் அரசியல் மற்றும் நிர்வாக முன்னுரிமைகள் ஆகும். பின்னர் சட்ட முன்மொழிவுகள், ஆலோசனைகள் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகள் மூலம் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆண்டின் முடிவில் இந்த இலக்குகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டன என்பது அரசின் வருடாந்திர அறிக்கையின் மூலம் மதிப்பிடப்படும்.






# பல மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பறக்கும் SWISS

## அக்டோபர் 27 முதல் Zuerich-Dubai தினசரி விமான சேவை!

சுவிட்சர்லாந்தின் SWISS விமான நிறுவனம், Zuerich-Dubai இடையிலான நேரடி விமான சேவையை 2026 அக்டோபர் 27 முதல் மீண்டும் தினசரி இயக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பாதுகாப்பு நிலைமை காரணமாக கடந்த பிப்ரவரி மாதம் முதல் Dubai-க்கான SWISS விமான சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது பல மாத இடைவெளிக்குப் பின்னர் இந்த முக்கிய சர்வதேச வழித்தடத்தில் சேவையை மீண்டும் தொடங்க நிறுவனம் தயாராகியுள்ளது.

புதிய அட்டவணையின்படி, Zuerich Airport மற்றும் Dubai இடையே தினமும் விமான சேவை இடம்பெறும். இதன் மூலம் Dubai மட்டுமன்றி, வளைகுடா பிராந்தியத்திற்குப் பயணிக்கும் சுவிஸ் பயணிகளுக்கும் மீண்டும் நேரடி பயண வாய்ப்பு கிடைக்கிறது.




# சுவிட்சர்லாந்தில் விவாகரத்து பெற்றவர் என்ற Civil Status நீக்கப்படுமா?

விவாகரத்து பெற்ற ஒருவர், தனது அதிகாரப்பூர்வ Zivilstand (Civil Status)-இல் வாழ்நாள் முழுவதும் "geschieden" - "விவாகரத்து பெற்றவர்" என குறிப்பிடப்பட வேண்டிய நடைமுறையை நீக்குவதற்கு சுவிஸ் கூட்டாட்சி அரசு ஆதரவு தெரிவித்துள்ளது.

FDP நாடாளுமன்றக் குழுவின் Motion இந்த மாற்றத்தைக் கோருகிறது. FDP/FR தேசிய சபை உறுப்பினர் Nadine Gobet முன்வைத்த இந்த Motion-க்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 12 Nationalrat உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நடைமுறையில் விவாகரத்து முடிந்து பல ஆண்டுகள் கடந்த பின்னரும், ஒருவரின் Civil Status "geschieden" என்றே தொடர்கிறது. ஆனால் Civil Status என்பது ஒருவரின் தற்போதைய சட்ட நிலையை காட்ட வேண்டுமே தவிர, அவருடைய வாழ்க்கை வரலாற்றை நிரந்தரமாகப் பதிவு செய்ய வேண்டியதல்ல என்பது Motion-ன் வாதம்.

மாற்றம் நடைமுறைக்கு வந்தாலும், விவாகரத்து பற்றிய தகவல் அதிகாரப்பூர்வ பதிவேடுகளில் தொடர்ந்து இருக்கும். எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு தேவையான தகவல் இழக்கப்படாது.

முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது "geschieden" என்ற Civil Status இப்போது நீக்கப்படவில்லை. Bundesrat Motion-ஐ நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக மட்டுமே தெரிவித்துள்ளது. தேவையான சட்ட மாற்றங்கள் குறித்து அடுத்ததாக நாடாளுமன்றமே முடிவு செய்ய வேண்டும்.

# Luzern-ல் சாதனை: 5,034 இளைஞர்கள் தொழிற்பயிற்சியைத் தொடங்கினர்




## 2011க்குப் பிறகு அதிகபட்சம்!

Luzern மாகாணத்தில் இந்த கோடைக்காலத்தில் 5,034 இளைஞர்கள் berufliche Grundbildung (அடிப்படை தொழிற்பயிற்சி) தொடங்கியுள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 114 பேர் அதிகம். ஒப்பிடத்தக்க புள்ளிவிவரங்கள் தொடங்கிய 2011 முதல், முதன்முறையாக 5,000 Lehrverträge என்ற எல்லை கடந்துள்ளது.

தொடர்ந்தும் வணிகத்துறை (kaufmän-nisch) மற்றும் சுகாதார-சமூகத்துறை பயிற்சிகளுக்கு அதிக வரவேற்பு உள்ளது. தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் துறைகளிலும் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

குறிப்பாக Montage-Elektriker பயிற்சி ஒப்பந்தங்கள் 57 இலிருந்து 102 ஆக உயர்ந்துள்ளன; Logistik, Sanitär மற்றும் Schreiner துறைகளிலும் வளர்ச்சி பதிவாகியுள்ளது.

Berufsmaturität படிப்பை இந்த ஆண்டு 976 பேர் தொடங்குகின்றனர். அவர்களில் 44% பேர் தங்களது தொழிற்பயிற்சியுடன் இணைந்தே Berufsmaturität செய்கின்றனர்.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட தொழில்தகுதியைப் பெறும் வயது வந்தோரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. 2026-ல் 230 பெரியவர்கள் அதற்கான கல்விப் பாதையைத் தொடங்கியுள்ளனர் – இது 2015க்குப் பிறகு அதிகபட்சம்.

Brückenjahr பயின்ற சுமார் 400 இளைஞர்களில் 84% பேர் தொழிற்பயிற்சிக்கு வெற்றிகரமாக மாறியுள்ளனர்.

# நூல் அறிமுக விழா


## வின்ஸ்லோஸ் அன்ரனியின்

# வேரிழந்த வாழ்க்கையும் தமிழர் பாதையும்

### ஆய்வும் பட்டறிவும் வழிகாட்டலும்


## 20.09.2026





## நூல் அறிமுக விழா

வேரிழந்த வாழ்க்கையும்
தமிழர் பாதையும்



**நூலாசிரியர்**

**வின்ஸ்லோஸ் அன்ரனி**
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர், சுவிஸ்

காலம் : 20.09.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 15.00 மணி
இடம் : Johanneum
Aemtlerstrasse 43 8003 Zürich

**தலைமை**

தகைசால் தமிழ்ப் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்

**நூல் அறிமுகவுரை**

முனைவர்
ச.மனோன்மணி சண்முகதாஸ்
(முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்,
கச்சுயின் பல்கலைக்கழகம், ஜப்பான்)

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- அகவணக்கம்
- தமிழ்மொழி வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- வாழ்த்துரை
  முனைவர் பார்த்திபன் கந்தசாமி
  (ஒருங்கிணைப்பாளர்,
  தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து)
- தலைமையுரை
  தகைசால் தமிழ்ப் பேராசிரியர் அ.சண்முகதாஸ்
- நூல் அறிமுகவுரை
  முனைவர் ச.மனோன்மணி சண்முகதாஸ்
  (முன்னாள் ஆய்வுப் பேராசிரியர், கச்சுயின் பல்கலைக்கழகம், ஜப்பான்.)
- நூல் அறிமுகம்
- நயவுரை
  அருட்பணி செபமாலை அன்புராசா அமதி
  (இயக்குநர், நலனோம்பு மையம், மாங்குளம், உப அதிபர், கலைத்தூது அழகியல் கல்லூரி)
- முதல் பிரதி
- சிறப்புப் பிரதி
  தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
  சான்றோர், ஆர்வலர்கள்...
- ஏற்புரையும் நன்றியுரையும்
  நூலாசிரியர் வின்ஸ்லோஸ் அன்ரனி